
www.padippakam.com

# நினைவுகள் அழிவதில்லை



படிப்பகம்

சு.நடராசா

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# அப்பா எனும் நண்பனின் விடைபெறல்...

மஞ்சுல வெடிவர்தன

அப்பாவின் இதயத் துடிப்பு நின்றுபோனது தெரிந்தது.

அச்செய்தி கிடைக்கப் பெற்றதும் அவரின் மகளான சகோதரி சுகந்தியின் கண்கள் கண்ணீரால் நனைந்து போயின.

அவள் பெருங்குரலெடுத்து அழுதாள்.

சுகந்தி ராவயவின் சகோதரத் தமிழ்ப் பத்திரிகையான நிகரியில் கணணி வடிவமைப்பாளராவாள். எனினும் அப்பாவை நாங்கள் சந்தித்தது அவளது அறிமுகத்தினாலல்ல. அவளது தமையனான எங்கள் சகோதர பத்திரிகையாளர் நடராசா சரவணனின் ஆத்ம நட்புறவின் மூலமாகத்தான்.

சரவணன் எனப்படும் சரா நேர்வேயிலிருந்து மீள தாய்நாட்டுக்கு வந்திருந்ததொரு சந்தர்ப்பத்தில் நாங்கள் அவரது இல்லத்தில் அவரை சந்தித்தோம். சராவின் வீடு 2 பர்ச்சர்ஸ் விஸ்தீரணமுடைய சிறு காணியில் கட்டப்பட்டுள்ளது.

அது கொட்டாஞ்சேனையில் குடியிருப்புகள் அதிகமானதொரு பகுதியில் அமைந்துள்ளது. நான்கு மாடிகொண்ட அவ்வீட்டின் மொட்டை மாடி எமது உரையாடல் மண்டபமாகியது.

அதுவோர் அருமையான நிலா முற்றம். சனநெரிசல் மிக்க நகரின் சிறுதெருக்கோடியொன்றில் வழிந்தோடும் காட்சிகளை ஊடுபாய்ந்து பார்த்திட உதவும்.



உயர்ந்து நிற்கும் மலைமுகடு போன்ற சராவின் வீட்டு நிலா முற்றத்தில் அப்பா எமக்கு அறிமுகமாகினார்.

“இது எங்கள் அப்பா” சரா அவரை எங்களுக்கு அறிமுகப்படுத்தினான். நாங்கள் ஆச்சரியமுற்றுப் போனோம். 52 வயதைக் கடந்திருந்தாலும் அவர் இளமையாயிருந்தார். எப்படியென்றால் எம்மையும் விட இளமையுடனிருந்தார்.

பின்னர் நாங்கள் நீண்டதொரு உரையாடலில் மூழ்கிப்போனோம்.

நாங்கள் நாட்டைப் பற்றி பேசினோம். .

தேசிய பிரச்சினை பற்றி பேசினோம். .

தேசிய விடுதலைப் போராட்டம் பற்றியும் உரையாடினோம். . .


படிப்பகம்

www.padippakam.com

பல மணித்தியாலங்கள் கடந்துபோயின. நாங்கள் கடுந் தர்க்கத்திலீடுபட்டோம். உச்ச குரலில் வாதிட்டுக் கொண்டோம்.

அது எமது அறிமுகம் உயர்பெறுதிமிக்கதென்பதால். அவரது வாதங்கள் தெளிவானவை. மென்மையானவை. அது அவர் வாழ்வில் உயர்பெறுதி மிக்கவரென்பதால்.

ஒரு தேசிய இனமாக விடுதலைப் பாதையில் இறங்கு முன்னதாக இனத்திற்குள்ளேயே அடக்குமுறைகளை எதிர்கொள்ளும் தமிழ் மக்களில் ஒருவரான அப்பா எனப்படும் நடராசா அதற்கெதிராக நீண்டகாலம் போராடி வந்த நேரடி கதாபாத்திரமாவார்.

அப்பா தனது வாழ்நாள் முழுதும் திரட்டி வந்துள்ள சமூக அனுபவங்களின் சிறந்த விளைபேறே எமது நண்பன் சரவணன்.

சாதிய அடக்குமுறைகளுக்கெதிராகவும் தேசிய ஒடுக்குதல்களுக்கெதிராகவும் சரா பத்திரிகையூடே நித்தமும் போராடிக் கொண்டிருக்க அக்கருத்துக்களினால் ஆட்கொள்ளப்படும் முதன்மை ஜீவியாக அப்பா இருந்தார். அவர் அப்பாவாக இல்லை ஒரு நண்பனாகவே இருக்கிறார் என சரா எங்களுக்கு கூறியிருக்கிறான்.

நேரடியாகவே அதை அவர்கள் வீட்டு நிலா முற்றத்தில் நாம் கண்டுகொண்டோம்.

சரா மீளவும் நோர்வே பயணமானான்.

அது சில மாதங்களுக்கு முன்னராகும். எனினும் திடீரென மீள அவன் நாடு திரும்பியிருப்பதாக தெரியவந்தது. அது பற்றி நாம் சராவிடம் விசாரித்தோம். அப்பாவின் இருதய சிகிச்சைக்கு வேண்டிய பணத்துடன் வந்திருப்பதாக சரா பதிலளித்திருந்தான்.

எனினும் இருதய சிகிச்சையொன்றிற்கு உள்ளாக அப்பா இருந்தாரில்லை தனது சுகவீனம் அந்தளவிற்கு பாரதூரமானதல்ல என்றும், அப்பணத்துக்கு வான் ஒன்றை வாங்கி குடும்பத்தை முன்னேற்றும் போராட்டத்தை தீவிரப்படுத்த வேண்டும் எனவும் அவர் கூறினார். இறுதியில் சரா அப்பாவின் விருப்பத்திற்கு கட்டுப்பட்டான்.

அவன் வான் ஒன்றை வாங்கினான். அப்பாவின் இதய ஓசை மகிழ்ச்சியில் ஆரவாரிப்பது சராவுக்குத் தெரிந்தது.

கடந்த 12ம் திகதி,

வான் பராமரிப்புகள் சார்ந்து அப்பா முற்பகல் பொழுதை வானுடன் கழித்திருந்தார். களைப்படையக் கூடாது என வைத்தியர்கள் கூறியிருந்தாலும் அதையும் மீறி அப்பா கடின வேலை செய்திருப்பது அவர் வானுடன் எந்தளவு தூரம் பிணைந்திருந்தார் என்பதை சான்றுபகர்கிறது.

இறுதியாக அவர் வானைக் கழுவினார். பின்னர் சாரதி இருக்கையில் அமர்ந்தார். எவரது கவனமும் அவர் மீது பதிந்திருக்கவில்லை. இதயத் துடிப்பின் சீரான தன்மை மாற்றமுற்றுக் கொண்டிருந்தது.

யாருமே பார்த்திராத வேளையில் அது மெதுவாக நின்றுபோனது.

அவர் சுக்கானின் மீது ஆறுதலாக தலை சாய்ந்திருந்தார்.

அது அப்பாவின் வாழ்வின் இறுதிக் கணமாகும்.

அந்தக் கணத்தில் நாம் எமது நண்பனின் அப்பாவை இழந்தோம்.

ஆனால் அவன் இழந்ததோ நண்பனான தன் அப்பாவை.

இதைத்தான் வாழ்வென்பது

இந்தளவிற்கு இது சிக்கல் மிக்கது.

நன்றி: ராவய (17. 03. 02)



படிப்பகம்

www.padippakam.com

# அப்போல்....!

நடராசா சரவணன்



பெப்ரவரி 4. இலங்கையின் சுதந்திர தினம். சுதந்திர தினம் பற்றிய எந்த அக்கறையும் இல்லாவிட்டாலும் கூட அது எங்கள் வீட்டில் எதிர்ப்ர்பாக்கை மிக்க நாள். அப்பா பிறந்த தினம் அது தான்.

1948 பெப்ரவரி 4இல் இலங்கை "சுதந்திரம்" பெற்றது. அதற்கடுத்த ஆண்டு அதே தினம் அப்பா பிறந்தார். "சுதந்திரம்" கிடைக்கப்பெற்ற வருடத்திலிருந்து ஒரு வருடத்தை குறைத்து அப்பாவின் வயதை கணக்கிடுவது எங்கள் வழக்கம்.

அப்பா பிறந்தது கொழும்பு வாழைத்தோட்டம் பகுதியில். டாம் வீதியில் விறகுமடுவத் தோட்டம் என்பது வாழைத்தோட்டத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற தோட்டமாக இருந்தது. அப்பாவின் அம்மா, அப்பா சகோதரர்கள் என அனைவரும் அருகருகிலான வீடுகளில் குடியிருந்தனர்.

பாட்டிக்கு 10 பிள்ளைகள். அப்பா எட்டாவது. பாட்டி மூத்த பிள்ளைகள் அனைவரையும் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பவில்லை. விபரம் தெரியவந்ததும் அவர்கள் அனைவரையும் தொழிலுக்கு அனுப்பினார். அப்பாவையும் ஆரம்பக் கல்வியுடன் இடைநிறுத்திவிட இருந்தார் பாட்டி. ஆனால் அப்பா அதனை மறுத்தார். அப்பாவுக்கு படிக்கும் ஆர்வம், எதனையும் தேடும் ஆற்றல், எநன்தநேரமும் அத்தனையிலும் ஓயாமால் கேள்வி எழுப்பும் பழக்கம் சிறு வயதிலிருந்து இருந்தது என்பதை மாமி கூறுவார்.

தொடர்ந்து அப்பா படிக்க செலவு செய்ய முடியாது என பாட்டி மறுத்துவிட்டார். அப்பா படிப்பதற்காக தானாகவே சிறு வயதில் தொழில் செய்தார். தெருவோர வியாபாரங்களின் மூலம் கிடைத்த சிறு பணத்தைக்கொண்டு அப்பா படித்தார்.

சிங்களவர், முஸ்லிம், தமிழர்கள் ஆகிய முச்சமூகத்தினரும் ஒன்றாய் கலந்து வாழும் வாழைத் தோட்டப் பகுதி உழைக்கும் தொழிலாளர்கள் அதிகமாக வசித்துவந்த பகுதி. அங்குள்ள சண்டித்தனம் மிகுந்தவர்கள் அப்பாவின் சினேகிதர்களாக இருந்தனர். அப்பாவும் அவர்களில் ஒருவராக இருந்தார். குறைந்தளவிலாக இருந்தாலும் அப்பாவின் கல்வி அவர்களில் அப்பா பகுத்தறிவுள்ளவராகவும், புத்திசாலியாகவும் இருந்தார்.



படிப்பகம்

www.padippakam.com

8ஆம் வகுப்பு. அவர் கற்ற இறுதி வகுப்பு. நெல்வீதி பாடகாலை எனப்படும். கொட்டாஞ்சேனை தமிழ் அரசினர் பாடசாலையிலிருந்து அவர் கல்விக்கு முழுக்கு போடும் போது அவர் அதற்குமேல் கற்பதற்காக உழைக்க முடியாதவராக இருந்தார்.

அடிக்கடி என்னிடம் அவரது கல்வி இடைநிறுத்தப்பட்டது பற்றியும் கல்விக்கு வீட்டாரின் ஒத்துழைப்பு கிடைக்காமல் இருந்தது பற்றியும் அதுவரை படிப்பதற்கே அவர் பட்ட கஸ்டங்களையும் விலாவாரியாக எடுத்துக்கூறுவார்.

அப்பா பல தொழில்களையும் செய்தார். காதல் அவரை ஆளாக்கியிருக்க வேண்டும். அப்பாவுக்கு டயறி எழுதும் பப்பம் உண்டு. சிறு சிறு விடயங்களையும் டயறியில் குறிப்பிடுகிறார். 1969ஆம் ஆண்டு டயறிக் குறிப்புகளில் அம்மாவுடனான முதல் சந்தித்பை குறிப்பிடுகிறார்.

அம்மா சிறு வயதிலேயே அவரது அம்மாவை இழந்து விட்டவர். அம்மா பிறந்த களுத்துறையிலிருந்து கொழும்புக்கு அழைத்து வரப்பட்டு தடிப்பாவின் வீட்டில் (அப்பாவின் அண்ணா) வீட்டில் அம்மா வளர்ந்தார். அம்மாவுடனான காதல் அங்கிருந்தே தொடக்கப்பட்டது.

அம்மாவின் குடும்பத்தினர் அப்பாவின் சினேகிதர்களை உதாரணமாக காட்டி காதலுக்கு தடை விதித்தனர். அப்பாவின் குடும்பத்தினரோ அம்மாவின் குடும்பத்தினரின் வசதி நிலையை காரணம் காட்டி எதிர்த்தனர். வீட்டின் கடும் எதிர்ப்புகள் மத்தியில் சவாலிட்டபடி அப்பா அம்மாவை திருமணம் முடித்தார்.

அப்பாவின் குடும்ப வாழ்க்கை வாழைத்தோட்டத்தில் அப்பாவின் "காம்பரா" வில் தொடங்கப்பட்டது. ஒரே ஒரு அறை மட்டுமே. அங்கே தான் நான் பிறந்தேன். அந்த அறை தான் சமையலறை... அது தான் படுக்கையறை... அங்கே தான் எனது தொட்டிலும்... அதே வீட்டில் தங்கை கல்யாணியும் பிறந்தாள்.

அப்பாவின் இளம் வயதில் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினராக இருந்தார். அதில் பாட்டியும் அங்கத்துவராக இருந்தார். அப்பாவின் குடும்பத்தில் பலர் பீற்றர் கெனமனின் ஆதவாளர்களாக இருந்தனர்.

ஆனால் இலங்கையில் தமிழ் மக்களின் மீதான இனவன்முறைச் சம்பவங்கள் மற்றும் பாரபட்ச நிகழ்வுகள் என்பன அப்பாவை உணர்வு ரீதியில் பாதிக்கச் செய்திருந்தது. 60களின் இறுதியில் அப்பா தமிழரக் கட்சியின் ஆதரவாளரானார். அவரின் அபிமானப் பத்திரிகையாக சுதந்திரன் ஆனது. அவரது அபிமான தலைவராக தந்தை செல்வா ஆனார். அவரது அபிமான எழுத்தாளர்களாக கோவை மகேசன், காசி ஆனந்தன், ஈழவேந்தன் போன்றோர் ஆனார்கள்.

அப்பாவின் புத்தக அலுமாரியில் இருந்த பெருமளவு நூல்கள் தமிழர்கள் பற்றிய புத்தகம். சுதந்திரன் வெளியீடு புத்தகங்கள் எத்தனையோ அவர் வசம் இருந்தன. அவர் ஆர்வமாக சேர்த்து சந்தோசப்பட்ட அந்த ஆவணங்களாக இருந்த அந்த அலுமாபியிலுள்ள நூல்கள் 70களில் வீட்டின் வறுமை காரணமாக விற்றது அவருக்கு பெரும் வருத்தத்தை ஏற்படுத்தியிருந்தது. வீட்டில் சுகந்திக்கு பால்மா இல்லை. எங்களுக்கு உணவு இல்லை. அந்தளவு வறுமை. செய்தறியாது இருக்கின்ற புத்தகங்களில் தெரிவு செய்யப்பட்ட நூல்களை எடுத்து கவனமாக பேக்கில் போட்டுக் கொண்டு என்னையும் கூடவே அழைத்துச்சென்று ஆமர் வீதியில் தெருவோர வியாபாரிகளுக்கு பேரம் பேசி சிறு விலைக்கு விற்று கிடைக்கும் பணம் தான் அந்த நாளைய அனைவரது வயிற்றையும் ஆற்றும். பிற்காலத்தில் எனது அறை முழுவதும் நூல்நிலையம் போல



படிப்பகம்

www.padippakam.com

நூல்கள் குவிந்து கிடப்பது பற்றி அவருக்கு நெஞ்சமெல்லாம் சந்தோசத்தால் குதித்தன. அவரது நண்பர்களிடம் என்னிடம் உள்ள நூல்கள் குறித்து பெருமைப்பட்டிருக்கிறார்.

வீட்டில் அனைவருக்கும் வாசிப்பு பழக்கத்தை அனைவருக்கும் வலியுறுத்துவார். சிறு வயதில் எனது வாசிப்பு அம்புலிமாமா, காமிக்ஸ் -பாலகுமார், ரமணிச்சந்திரன், லஸ்மி- சாண்டியல்யன், கோவி மணிசேகரன் போன்ற வாசிப்பு கட்டங்களை நோக்கி நகர்த்தியது அப்பா தான். அதன் நீட்சியாகவே மார்க்சிய இலக்கியங்களுக்குள் நுழைய வழி கிடைத்தது.

----------

சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் விளைவாக தேடித்தேடி அனுப்பப்பட்ட இந்திய வம்சாவழியினரில் ஒருவரான அப்பாவின் சினேகிதர் 1976இல் அப்பாவுக்கு கொட்டாஞ்சேனை சிறி குணாநந்த மாவத்தையிலுள்ள வீட்டை விற்றுவிட்டுச் இந்தியா சென்றார்.

நாங்கள் அந்த வீட்டுக்கு வந்து சேர்ந்தோம். வீடு சிறிய குடிசைதான். எனது ஞாபகத்தில் இந்த வீட்டுக்கு எவர் வந்தாலும் குனிந்து தான் வர வேண்டும். வாசல் அந்தளவு பனிவாக இருந்தது. கூரைக்கு தகரம் போட்ட பலகை வீடு அது. அம்மா சாணி போட்டு தான் தரையை மெழுகுவார்.

இந்த வீட்டுக்கு வந்தபின் தான் அப்பா முழுமையான குடுபஸ்தராக அதிக பொறுப்புள்ளவராக ஆனார். அவர் பற்றி குடும்பத்தினர் மத்தியிலிருந்த அவநம்பிக்கைகளை தகர்த்தெறிவதற்காக அவர் கங்கணம் கட்டிக்கொண்டதாக அப்பா கூறியிருக்கிறார்.

1978இல் தங்கை சுகந்தி பிறந்தாள். 1979இல் அப்பா பால்ய சினேகிதர் நாங்கள் காதர் மாமா என்று அழைக்கின்ற காதரின் உதவியுடன் லொறி வாங்கினார். அதற்கு கல்யாணி என்று பெயரிட்டார். அப்பாவுக்கு அந்தோணி மாமா (கார் மாமா) வாகனம் ஓட்டச் சொல்லிக் கொடுத்தார். இந்த லொறியின் மூலம் ஏறாளமான நட்டமடைந்தார். கடனாளியானார். 1979இல் வெளிநாட்டுக்கு அம்மாவும் அப்பாவுமாக புறப்பட திட்டமிட்டனர். அப்பாவுக்கு முன் அம்மாவுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பு கிடைத்தது.

அடுத்த வருடமே அப்பாவும் பயணமானார். அதன் பின் அம்மாவும் அப்பாவும் மாறி மாறி வருவதும் போவதுமாக இருந்தனர். 1994இல் அம்மாவை இனி போகவேண்டாம் என்று நாங்கள் நிறுத்தினோம். 1997இல் அப்பாவையும் நிறுத்தினோம்.

----------

கடந்த வருடம் எனது உளவியல் அதிகளவு பாதிக்கப்பட்டிருந்த காலம். உளவியலை சரிசெய்வதென்றால் இலங்கை புறப்படும் தீர்மானத்தை எடுத்தேன். இப்படியான மனச் சிக்கல்களுடன் நீ அங்கே இருக்காதே இங்கே வந்து சேர்ந்துவிடு. நாங்கள் இருக்கிறோம் என்றார் அப்பா. அப்பாவின் இருதய சத்திரசிகிச்சையை உடனடியாக செய்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வோம் என தீர்மானித்தேன். அதற்காக இரவு பகலாக கடுமையாக உழைத்தேன்.

டிசம்பர் 28 அன்று நோர்வேயிலிருந்து இலங்கை புறப்படும் தீர்மானம் குறித்து நோர்வே நண்பர்கள் பலரும் தமது அதிருப்தியை தெரிவித்தனர். ஜனவரி போகும்படி கூறினர் சிலர். வீட்டாரோடு சந்தோசமாக இருக்கவேண்டுமெனத் தோன்றுகிறது. இம்முறை அம்மா, அப்பா தங்கை, தம்பிமாருடன் நான் புதுவருடத்தை கழிப்பது எனது ஆசை. அது எனத நிலையில் பெருத்த ஆறுதலைத் தருமென்று


படிப்பகம்

www.padippakam.com

எதிர்பார்க்கிறேன் என்றேன் அனைவரும் வழியனுப்பி வைத்தனர்.

டிசம்பர் 29 காலை அப்பா சொன்னபடி வழமைபோல எயார்போர்ட் வந்து சேர்ந்திருந்தார். வான் ஒன்றை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு தம்பி அரவிந்தனையும், சுகந்தனையும் ஏற்றிக்கொண்டு வந்திருந்தார். என்னைக் கண்டு நெருங்கியதும் அவரது கால்கள் அவசரப்பட்டன. கிட்ட வந்து கட்டி அனைத்துக்கொண்டார்.

“இந்த முறை நீ அழகாக வந்திருக்கிறாய். இந்த கோர்ட் உனக்கு மிகவும் அழகாக இருக்கிறது. நான் சொன்னபடி இந்த முறைதான வந்திருக்கிறாயடா...” என்றபடி என்னை வரவேற்றார்.

நான் வருவது தெரிந்து வீட்டை புதுப்பொழிவுடன் திருத்தி வைத்திருந்தார்.

காலை எழுந்து அவசரமாக குளித்துவிட்டு வருவதற்குள் ஒரு கையில் தினக்குரல் பத்திரிகையும் மறு கையில் சீவிய இளநீருமாக அப்பா வந்து நிற்பது நாளாந்த வாடிக்கையாகி விட்டது. கதிரையில் வந்து அமர்ந்தவுடன் அன்றைய பத்திரிகையின் பிரதான விடயங்கள் குறித்து கொசுறுக்காக எதையாவது கூறி கதைக்கு இழுப்பார்.

அப்பாவின் இருதய சத்திரசிகிச்சைக்கான தேவை இல்லையெனவும் அந்தளவு அவசியம் இல்லையென டொக்டர்கள் அறிவித்துவிட்டதாகவும் வீணாக பல லட்சக்கணக்கான காசை கறியாக்கத் தேவையில்லை எனவும் அதற்குப் பதிலாக அந்தப்பணத்தில் வான் ஒன்றை வாங்கித் தந்தால் முதலீடாகவும், தனக்கான உத்தியோகமாகவும் இருக்கும் என்றார்.

அப்பா தனது உடல் நிலை குறித்து டாக்டர்கள் சொன்னதாக கூறியதை நானும் அப்படியே நம்பியிருந்தேன். உள்ளூர சந்தேகமும் பயமும் இருந்தாலும் நான் அப்பாவை நம்பினேன்.

அவரது வான் வாங்குவது பற்றி திட்டத்திற்கு சம்மதித்தது அவருக்கு பெரும் களிப்பை உண்டு பண்ணியிருந்தது.

ஒன்றரை மாதங்களாக வான் வாங்குவதற்கான ஒழுங்குகளையும் வான்கள் தேடித்திரிவதிலுமாக அவரது பெருமளவு நேரம் செலவானது.

ஒரு படியாக பெப்ரவரி 14 அன்று வான் வாங்கினார். அது ஒரு காதலர் தினம். வீட்டு மொட்டை மாடியிலில் பூத்திருந்த செந்நிற ரோஜாப்பூக்களை அம்மா பிடுங்கி வந்து அப்பாவுக்கு பரிசளித்தார். அப்பா அம்மாவுக்கு வான் சாவியை பரிசளித்தார்.

அப்பா மிகவும் குதூகலமாக இருந்தார். எங்கெல்லாம் போக வேண்டுமோ சொல்லடா நோர்வே திரும்புவதற்குள் அத்தனை இடத்திற்கும் போவோம் என்றார்.

எனது எழுத்துப்பணிகளுக்காக சுவடிகூடம், தேசிய நூலக சேவைகள் சபை, மியுசியம் நூலகம் பொது நிறுவனங்கள் என அனைத்து இடங்ளுக்கும் அப்பா என்னை வானில் அழைத்துச்சென்றார். என்னோடு உள்ளேன வராமல் மணித்தியாலக்கணக்காக ஆனாலும் வானிலேயே இருந்து காத்துக் கொண்டிருப்பார். நான் வந்து சேரும் போது எதையாவது வாசித்துக் கொண்டோ, தூங்கிக்கொண்டோ இருப்பார். நான் எழுப்பி அப்பா போவோமா என்றதும் அவர் வாயிலிருந்து வரும் அடுத்த வார்த்தை அடுத்தது எங்கே போக வேண்டும் என்பது நான் எனது நிகழ்ச்சி நிரலுக்காக தனது தனது நேரத்தையும் சக்தியையும் வளத்தையும் முழுமையாக எந்த நோவும் இல்லாமல் சந்தோசத்துடன் தந்தார்.

எனது வேலைகளை அவருக்குத் தரவில்லையென்பதற்காக கோபித்துக் கொண்ட நாட்களும் உண்டு. சிறியவர்களைப்போல கடைகளுக்கு அவரே



படிப்பகம்

போய்வந்தார். என்னை வீட்டு வேலைகளை செய்ய விடவில்லை அவர்.

ஞாயிற்றுக்கிழமை தமிழ், சிங்கள, ஆங்கில பத்திரிகைகள் அனைத்தையும் வாங்கி வந்துவிடுவார். கொண்டு வந்ததும் அனைத்தையும் பின் பண்ணி ஒழுங்குபடுத்தி விடுவார். முக்கியமானவை எனக்கருதும் முக்கிய அரசியல் கட்டுரைகளை வெட்டி ஆவணப்படுத்தி எனக்காக வைத்திருப்பார். பத்திரிகைகளில் முன்னர் வெளிவந்த ஒரு ஆக்கத்தை தேடினால் அதனை மிகவும் இலகுவாக அவர் கண்டுபிடித்து தந்துவிடுவார்.

பெப்ரவரி மாதம் பேரினவாதம் குறித்த ஒரு கட்டுரையொன்றிற்காக கொழும்பு முழுவதும் ஒட்டப்பட்டிருந்த போஸ்டர்கள் சிலவற்றைத் தேடி புகைப்படம் எடுக்க வேண்டி வந்தது. அப்பாவிடம் கூறினேன்.

"வா போவோம் என்றார்." கொழும்பில் பல இடங்களிலும் அந்த போஸ்டர் ஒட்டப்பட்டிருந்தாலும், சன நெரிசல் இல்லாத இடத்தைத் தேடி வானில் புறப்பட்டோம். சுற்றி சுற்றித் தேடினோம். ஆனால் அனைத்து இடங்களுமே சிக்கலான இடங்களாக இருந்தன. தெமட்டகொடை அடைந்தோம். அங்கு இப்படியான போஸ்டர்களைக் கண்டோம். ஆனால் அங்கும் குழுமியிருந்த சனத்தைப் பார்த்து தயங்கினேன்.

"நீ வானுக்குள்ளேயே இரு. நான் புகைகப்படம் எடுத்துக்கொண்டு வருகிறேன். இந்த இடத்தில் போஸ்டர்கள் நல்ல நிலையிலும் இருக்கின்றன. இதனையும் தவற விடவேண்டாம்" என்றார். எனக்கோ அவசரப்படத் தேவையில்லை எனத்தோன்றியது. அதற்குள் அவர் கெமராவையும் எடுத்துக்கொண்டு வானிலிருந்து இறங்கி விட்டார். பல புகைப்படங்களை எடுத்துவிட்டுவந்தார். நான் வான் கண்ணாடியின் மூலம் அவதானித்துக் கொண்டிருந்தேன். அருகில் இருந்த சிலர் கிட்ட வந்தனர்.

"எதற்கு இது" என்றனர்.

"பத்தரட்ட... பத்தரட்ட..." என்று கூறிக்கொண்டே வானில் ஏறி பறந்தோம். நிகரியில் வெளிவந்த அந்த கட்டுரையின் உள்ளடக்கத்திற்கு அந்தப் புகைப்படங்கள் அதிக வலு சேர்த்ததாக அமைந்தது.

எனது பத்திரிகை நண்பர்கள் அவரை எனது அப்பா என நம்ப மறுப்பார்கள். உங்கள் அண்ணன் அல்லவா என்பார்கள் அந்தளவு இளமையாகவும், துடிப்பாகவும், உற்சாகமாகவும் எப்போதும் கலகலப்பாக உரையாடிக் கொண்டிருப்பார்.

எனது எழுத்துப் பணிகள் குறித்து அவர் எப்போதும் எச்சரிக்கை செய்து வந்தார். "ஆபத்தடா... கவனமடா" என்பார். ஆனாலும் எனக்கு முழு ஆதரவு தந்தார். உறுதுணையாக இருந்தார்.

எனது எழுத்துக்களின் மீதான கருத்து வைக்கும் முதல் நபர் அவர். எனது எழுத்துகளை அவருக்கு அறிந்தவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கூடாக அவர் அதிக பெருமைப்படுவார். அதிக ஆனந்தமடைவார்.

எனக்கு விபரம் அறியாத பருவத்தில் கூட தமிழர் பிரச்சினை பற்றிய வரலாற்றை திருப்பித் திருப்பிக் கூறுவார். அதனைக் காவிக்கொண்டு நான் பாடசாலையில் எனது நண்பர்களுடன் எனக்கு தெரிந்த விளக்கங்களுடன் பகிர்ந்துகொள்வேன்.

என்னிடம் அரசியலை கேட்டுத் தெரிந்துகொள்ளும் காலம் வந்தது. அப்போது அவர் நிறைய என்னட் விவாதித்தார். சமீபத்தில் அவருடனான விவாதம் பொங்கு தமிழ் பற்றியது.

பொங்கு தமிழ் நிகழ்வை கொழும்பில் எற்பாடு செய்ய வேண்டும் என்றார். அது

www.padippakam.com

குறித்து தனது தினக்குரல் நண்பர்களும் பேசிக்கொண்டார்கள் என்றார்.

பொங்கு தமிழ் நிகழ்வை தமிழீழ எல்லைகளுக்கு வெளியில் நடாத்துவதில் உள்ள அரசியல் சிக்கல்களை நான் விரிவாக கூறிய போது அதனை எற்றுக் கொண்டார். அது வரை அதனை கொழும்பில் ஏற்பாட்டொழுங்குகளை செய்ய தானும் பங்களிக்கப் போவதாக கூறிக்கொண்டிருந்தார்.

எந்த கருப்பொருளையும் அவருடன் கலந்துரையாடல் முடியும். பரந்த வாசிப்பும் தர்க்கபூர்வமாக ஒன்றை நகர்த்துவதற்கும் அவரால் இயன்றது. அவருக்கு நண்பர்கள் அதிகம். அத்தனை பேரும் அவரது பேச்சால் கவரப்பட்டவர்கள் அவரின் தினக்குரல் நண்பர்கள் கூறுவார்கள்.

"எந்த வயதுக்காரருடனும், அந்தந்த வயதுக்குரிய விடயங்கள் குறித்து அவர்போல பேச பழகக் கூடியவரை நாங்கள் இது வரை காணவில்லை.." என்றார்கள்.

அப்பா எனக்கு அப்பாவாக இருக்கவில்லை. அவர் எனக்கு நல்ல எதனையும் பகிர்ந்துகொள்ளும் நண்பனாக, அரசியலை உரையாடக்கூடிய நல்ல தோழனாக, எனது பொது வேலைகளுக்கு ஒத்துழைக்கும் நல்ல உதவியாளராக இருந்தார் அப்பா.

எனது அத்தனை செயற்பாடுகளுக்குமே பெருமைப்படவும் சந்தோசப்படவும் அப்பா இருந்தார். தட்டிக்கொடுக்கவும், அதற்கு ஒதத்தாசைக்கும் அப்பா இருந்தார். எனக்குரிய தெம்பே அப்பா தான். எனது எழுத்தின் பின்னால் இருந்த சக்தியாக அவர்தான் இருந்தார் என்பதை அவரின் இழப்பின் பின்னர் தான் உணர முடிந்தது. இனி எனது படைப்புகள் எனது முயற்சிகள் குறித்து பெருமைப்பட எனக்கு அப்பா இல்லை. அதனை பற்றி உரையாடவும்,



கருத்தறிந்துகொள்ளவும் அப்பா இல்லை.

ஆனால் அவரது கனவுகள், அவரது சமூகப் பிரக்ஞை, அவரது நேர்மையான எண்ணங்கள் உன்னதமான இலட்சியங்களாக மிஞ்சியிருக்கின்றன.

---------

மார்ச் 12, மகா சிவராத்திரி...

காலையில் வானை பார்க் பண்ணியிருந்த இடத்திலிருந்து எடுத்து வருவதற்காக சென்றார்.

வீடு வந்து சேரும் போது நேரமாகியிருந்தது. வானின் ரயர் பழுதாகிவிட்டதால் தானே அதனை கழற்றி வேறு ரயர் மாற்றியதால் நேரம் சென்றுவிட்டதென்றும், களைப்பாக இருப்பதாகவும் கூறினார்.

"ஆஸ்பத்திரிக்கு போவோமா...?" என்று அம்மா கேட்டார்.

"அந்தளவு தேவையில்லை. கொஞ்ச நேரத்தில் சரியாகிவிடும். மார்கட்டுக்கு



படிப்பகம்

www.padippakam.com

போகவேணும் தானே.. புறப்படு அரவிந்தனையும் கூட்டிக்கொண்டு போய்வருவோம்..'' என்றார் அப்பா...

மூவரையும் கூட்டிச்சென்று வீட்டுக்கு தேவையான பலசரக்குகள் வாங்கிக் கொண்டு எனக்கு சாப்பிட பெட்டீசும், பேஸ்டிரியும் வாங்கி வந்தனர்.

வீட்டுக்கு வந்து பொருட்களை வைத்துவிட்டு மீண்டும் பாதையில் வைத்து வானை அரவிந்தனோடு: சேர்ந்து கழுவினார்.

கழுவிய கொஞ்ச நேரத்தில் அரவிந்தனை வீட்டுக்கு அனுப்பிவிட்டு "நான் வானை திருப்பி கொண்டு நிறுத்திவிட்டு வருகிறேன் நீ போ..." என்றிருக்கிறார்.

அப்பாவை காலையிலிருந்து நான் பார்க்கவில்லை. ஒரு கட்டுரைக்கான தயாரிப்பில் இருந்தேன். மதியம் 1.25 இருக்கும் தம்பி சுகந்தன் ஓடி வந்தான் பதட்டமும் பீதியும், அழுகையும் அவனின் முகத்தில் தெரிந்தது. "அப்பா ஒரு மாதிரி இருக்கிறார்.. எழும்புறார் இல்லை... என்று முடிப்பதற்குள் வேனை நோக்கி ஓடினேன். அம்மாவும் பதட்டத்துடன் என்னுடன் ஓடி வந்தார். அயல் வீட்டார் அனைவரும் வீடுகளுக்கு வெளயில் வந்திருந்தனர். ரோட்டில் நிறுத்தப்பட்டிருந்த வானைச் சுற்றி சனங்கள் கூடியிருந்தனர்.

வான் கதவு ஏற்கெனவே திறந்தபடி அருகில் உள்ளவர்கள் அவரை எழுப்ப முயன்றனர். வானில் ஏறி வானின் சுங்கானின் மீது தலை கவிழ்ந்தபடி வாய் மட்டும் லேசாக திறந்தபடி. அப்பா தூங்குவதைப் போல இருந்தார். அப்பாவை தட்டி தட்டி எழுப்பினேன். எழும்பவில்லை. அப்படியே அப்பா சரிந்தார். ஐயோ என கதறத் தொடங்கிவிட்டேன். அப்பாவுக்கு இதற்கு முன்னர் இப்படியான மயக்கம் வந்திருக்கிறது. நிச்சயம் அப்பா எழும்பி விடுவார்.

அருகில் உள்ளவர்களை ஆட்டோ பிடிக்கச் சொன்னேன். அருகில் இருந்த ஒருவர் தனது ஆட்டோவை கொண்டுவந்து நிறுத்தினார். உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லுங்கள் என குழுமியிருந்தவர்கள் கூறினர். அப்பாவை நானும் பக்கத்து தோட்டத்து சுதாவும் தூக்கினோம். பாரமாக இருந்தார். கஸ்டப்பட்டு ஆட்டோவில் தலை அம்மாவின் மடியிலும் நடுவில் நானும், சுதாவின் மடியில் அப்பாவின் காலுமாக கொண்டு சென்றோம். அப்பாவின் உடல் எந்தவித உணர்ச்சியும் அற்று இருந்தது. கைகளும் கால்களும் தன்பாட்டில் விழுந்தன. அப்பாவின் உடல் குளிர்ந்தது. அப்பா எங்களை விட்டு பிரிந்து விட்டாரோ என்று சந்தேகம் வந்தது. இருக்கக் கூடாது. அம்மா புலம்பத் தொடங்கினார். அடே மூச்சையே காணவில்லையடா... வேமாக போங்களேன் என்று ஆட்டோ காரரிடம் கூறினர்.

சுலைமான் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றவுடன் அங்கு இருந்த பணியாளர்கள் ஸ்ட்ரெச்சரை கொண்டு வந்தனர். அப்பாவை அதில் தூக்கி வைத்தோம். டொக்டர் உள்ள அறையொன்றில் நோயாளிகள் பலர் இருந்தனர். முதலில் கொஞ்சம் இவரைப் பாருங்கள் என்றேன்.

அவர் வந்து அப்பாவின் நாடித்துடிப்பை பார்த்தார். கண்களைக் கைகளால் திறந்து டோச் அடித்து பார்த்தார்.

அமைதியாக அவர் திரும்பி அவரது கதிரைக்கருகில் வந்து

"என்ன நடந்தது.." என்றார்.

"வானில் சரிந்தபடி இருந்தார்."

"முன்னர் ஏதாவது நோய் இருந்ததா.."

கேள்விகள் எங்களுக்கு நம்பிக்கை தருவதைப்போல இருந்தது. அவர் கேட்கும் கேள்விகள் சிகிச்சைக்காக கேட்கிறார் என்று நம்பினோம்.


படிப்பகம்

www.padippakam.com

"நெஞ்சு வருத்தம் இருந்தது... ஒன்றும் பிரச்சினையில்லையே..."

"அவர் மோசம் போயிட்டார்..." என்றது மாத்திரம் தான்

அம்மா எழுது கதறினார். இல்ல நிச்சயமாக இல்ல என்றார். நான் டொக்டரின் கால்களைப் பிடித்து விட்டேன். பிளீஸ் கொஞ்சம் முயற்சி பண்ணி பாருங்கள். இன்னும் பாருங்கள் பிளிஸ் டொக்டர். என்று கால்களை குலுக்கிக் கொண்டு அழத் தொடங்கினேன்.


அப்பா வீடு கட்டிய போது...

அம்மாவின் சத்தம் அந்த ஆஸ்பத்திரியை அதிரவைத்துக் கொண்டிருந்தது. பலரும் வந்து குழுமினர். ஆஸ்பத்திரி ஊழியர்கள் மேலும் செய்யவேண்டிய ஏனைய ஏனைய கடமைகளை செய்யுங்கள் கொண்டு போங்கள் என்றார்கள்.

இன்னும் முயற்சி பண்ணலாமல்ல என்கிற ஆத்திரத்துடன் இருந்த எங்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. எனது சோகங்களுடன் அம்மாவை சமாளிக்கவும் வேண்டியிருந்தது. நிலைமையை அப்பாவின் நண்பர் பியசேனவுக்கு எடுத்துச் சொல்ல சுதாவை அனுப்பினேன். எனது கால்கள் சிந்தனை அனைத்துமே என்ன செய்வதறியாமல் அங்குமிங்குமாக ஓடின. பெரிய ஆஸ

'பத்திரிக்கு எடுத்துச்செல்வோம் என அம்மாவிடம் சொன்னேன். ஆஸ்பத்திரி வரவேற்பறையில் அம்புலன்ஸ் ஒன்றை தரும்படி கேட்டேன். அங்கு இல்லையென்றார்கள். எங்கிருந்தாவது அம்புலன்சை வரவழைக்கும்படி கெஞ்சினேன். அருகில் இருந்த ஒருவர் உதவி செய்தார்.

அப்பாவைத் தாங்கிய ஸ்ட்ரெச்சரை அந்த இடத்தில் இருந்து அகற்றும்படி கேட்டனர் ஆஸ்பத்திரி ஊழியர். சிலரின் உதவியுடன் பக்கத்தில் காத்திருக்கும் பகுதியில் கொண்டு வந்து ஸ்ரெச்சரை நிறுத்தினோம். அம்மாவின் தொடர்ச்சியான அலறல் கேட்டுக் கொண்டிருந்தது.

"ஏங்க உங்களுக்கு ஒண்ணும் ஆகல்லீங்க... எழும்புங்க... ஐயோ அப்பாவ எழும்ப சொல்லு சரவணா..."

என்று தொடர்ந்தும் சத்தமிட்டு அழுதுகொண்டிருந்தார். அப்பாவின் உடலை குளிர விடாமல் தடுக்க வேண்டுமென நானும் அப்பாவின் அடிப் பாதங்களை மீண்டும் வேகமாக தேய்த்துக்கொண்டிருந்தேன்.

நீல சட்டையும், பிரவுன் நிற சாரமும் அணிந்திருந்தார். அப்பாவின் உடலைத் தொடுகிற போது மேலெல்லாம் நடுக்கமும் புல்லரிப்புமாக இருந்தது. இந்த உடலை இனி தொடமுடியாதென்றல்லவா கூறுகிறார்கள். "எழும்புங்கள் அப்பா" என்று அவரின் நெஞ்சில் படுத்தேன். நெங்சில் அப்படியே தலையைத் திருப்பி காதை வைத்து இருதய சத்தம் கேட்கிறதா என்று பார்த்தேன். எந்த சத்தமும் இல்லை. அப்பாவின் நெஞ்சைபிடித்து இருகைகளாலும் அழுத்தம்



படிப்பகம்

www.padippakam.com

கொடுத்து பார்த்தேன். அழுகை அழுகையாக வந்தது. கண்களில் நீர் நிறைந்து வெளியில் வழிந்தது. அம்மாவின் சத்தத்தையும் அம்மாவின் கோலத்தையும் பார்க்கும் போது நெஞ்சு விம்மியது. அந்த இடத்தில் இருக்க இயலாம் மீண்டும் வெளியில் வந்து அம்புலன்சைப் பார்த்தேன். அங்கு வரும் வாகனங்கள் எல்லாம் அம்புலன்ஸ் என்று நினைத்தேன். கால்கள் இங்குமங்குமாக ஓடின.

அம்புலன்ஸ் வந்தது. அப்பாவை கவனமாக ஆஸ்பத்திரி ஸ்ட்ரெச்சரிலிருந்து அம்புலன்ஸ் ஸ்ட்ரெச்சரில் படுக்க வைத்தோம். அம்மாவும் நானும் அம்புலன்சில் ஏறினோம்.அதற்குள் நண்பர்கள் சிவா, அமீட் அனைவரும் வந்து சேர்ந்தனர். அம்புலன்சில் அம்மாவும் நானும் அழுதுகொண்டிருந்தோம். "நேராக பெரிய ஆஸஜ்பதிதிரிக்கு கொண்டு போயிருக்கலாமில்லையா" என அம்புலன்ஸ்சை தொடர்ந்தபடி நண்பர்களும் வாகனங்களில் வந்து கொண்டிருந்தார்கள்.

பெரிய ஆஸ்பத்திரியில் அம்புலன்ஸ் நின்றதும் ஸ்ட்ரெச்சரை வெளியில் கவனமாக எடுத்து கொண்டு சென்றோம். அங்கிருந்த அறையொன்றில் பல நோயிளிகள் மத்தியில் ஒரு பெண் டொக்டர் ஓரிரு நிமிடங்களில் எங்கள் பக்கம் வந்தார். விசாரித்து விட்டு இன்னொரு அறையை காட்டினார். அங்கு கொண்டு செல்லும்படி கூறினார். காட்டப்பட்ட அந்த அறைக்கு மீண்டும் ஸ்ட்ரெச்சரை தள்ளிக்கொண்டு சென்றோம். நண்பர்கள் அனைவரும் வெளியில் நின்றனர். நானும் அம்மாவும் உள்ளே சென்றோம். அப்பாவுக்கு கருவிகளைப் பொருத்தினார்கள். இதயத்துடிப்பு நின்றிருந்ததை கணிணித்திரை உறுதிப்படுத்தியது.

எங்களுக்கு இருந்த கடைசி நம்பிக்கையும் போய்விட்டது. அம்மா "ஓ" வென கதறி அழுகிறார். நண்பன் அமீட் என்னை வந்த அணைத்த போது அவ்வளவு நேரமும்



அடக்கி வைத்திருந்த அழுகை பீறிட்டு கிளம்பியது. இறுதி சந்தர்ப்பமும் இல்லாமல் போயடட்டது. அப்பா இனி எங்களோடு இல்லை என்பது உறுதியாயிற்று. அவர் இனி கிடைக்கமாட்டார் என்பது உறுதியாயிற்றே...

நான் நோர்வேயிலிருந்து திரும்பியது இழந்த உளவியலை சரிசெய்வதற்கே. இழப்புகளையும், பட்ட அடிகளையும் ஈடுசெய்வதற்கே. மரத்தில் விழுந்தவனை மாடேறி மிதித்ததைப் போல அடுத்த அடியும் இன்னும் பலமாக விழுந்ததை தாங்கிக்கொள்ள இயலவில்லை. தொடர்ந்தும் அழுகை வரவில்லை. மரத்துக்போனது. வாழ்தல் பற்றி இருந்த கொஞ்ச நஞ்ச பிடிப்பும் இல்லாமல் போனது போல வெறுமையாக இருந்தது. பேச்சும் குறைந்து போனது. செயல் வாசிப்பு, எழுத்து அனைத்தும் குறைந்து போனது. கதைத்தால் சில வேளை அது புலம்பல் போல நானே உணரத்தொடங்குமளவுக்கு போன போது தான் அப்பாவின் இழப்பின் பாதிப்பை விளங்கிக்கொள்ளக்கூடியதாக இருந்தது. அந்த துயரம் அவரின் நினைவுகளால் நெஞ்சை தொடர்ந்தும் அரித்துக் கொண்டே இருக்கப் போகிறது. அது அவலகரமானது.

அந்த நினைவுகள் இருக்கக்கூடாதது...! இருக்க வேண்டியது...!


படிப்பகம்

www.padippakam.com

# இழப்பு

**அரவிந்தன்**

நண்பனை தேடிக் கொண்டு அவனது வீட்டு வாசலில் காலடி வைக்கிறேன்.

கதவைத் திறந்து கொண்டு வருகிறார் ஒருவர். இயல்பான புன்னகை. ஒரு நாற்பத்தைந்து வயது கூட மதிக்க முடியாத தோற்றம்.

"வாங்க சார்" என்கிறார்.

ஒரு கணம் எனக்கு ஆச்சரியம். யார் இந்தப் பதியவர் என்ற கேள்வி என்னுள் எழுந்தது. ஆனால் மறுகணமே நண்பன், தனத தகப்பனார் வெளிநாட்டிலிரந்து வருவதாக சொன்னது ஞாபகத்திற்கு வரவே ஊகித்துக் கொண்டேன்.

நம்ப முடியாத இளமை. ஐந்து பிள்ளைகளின் தகப்பனார் இவர் என்பதையும், அதிலும் அவரது மகன் இருபத்தைந்தை தாண்டியவன் என்பதையும் நம்பத்தான் முடியவில்லை.

நண்பன் இல்லையா என்று கேட்டேன்.

"இல்லை வெளியிலே போயிட்டார்... நீங்கள் அரவிந்தன் தானே... வந்து உக்காருங்கோ. இப்ப வந்திடுவதாக சொல்லித்தான் போனார்."

எளிமையான இயல்பான உரையாடல்

ஆச்சரித்துடன் உள்ளே போய் உட்கார்ந்து கொள்கிறேன்.

இப்படித்தான் அவருடனான எனது அறிமுகம் தொடங்கியது.

அதன்பிறகு அங்கு போகும் போதெல்லாம் சில நிமிடங்கள் அவருடன் உரையாடுவேன். மிகவும் கவனமாக ஆனால் வேகமாக நிறைய விடயங்களைச செய்வது பற்றி அவர் சொல்வார். வீடு கட்டுவது முதல் தனக்கு ஒரு வேலை தேடிக்கொள்வது வரை.

அவர் தான் நண்பன் சரவணனின் அப்பா நடராஜா.

அப்போது நாங்கள் சரிநிகர் நடத்திக் கொண்டிருந்தோம். பத்திரிகையில் மகன் வேலை செய்வது பற்றி அவருக்கு நிறைய பெருமை. சரவணனின் நண்பர்கள் என்று யார் போனாலும் வரவேற்று உபசரித்து சந்தோசமாக பேசிக் கொண்டிருப்பார். சரவணனது பத்திரிகை உலக சிங்கள, தமிழ் நண்பர்களில் அவரைத் தெரியாத யாரும் இருக்க முடியாது.

கடந்த 12ம் திகதி திடீரென மாரடைப்பால் காலமானார் என்ற செய்தி நிகரி அலுவலகத்திற்கு வந்த போது யாராலும் நம்ப முடியவில்லை. இந்த மனிதரும் இறந்து போனாரா? என்பது போல அந்தச் சந்தேகம் எல்லோருக்கும் எழுந்தது. நிகரியில் அரவது மகள் சுகந்தி வேலைசெய்கிறார். அவருக்கு இந்தச் செய்தியை சொல்லும் போது கூட ஒரு நம்ப முடியாத செய்தியைச் சொல்வது போன்ற உணர்வு தான் இருந்தது என்கின்றார் சக பத்திரிகையாளர் ஒருவர்.

அவ்வளவு உறுதியான மனிதராக இருந்தார் அவர். அந்த மனிதர் இன்று எம்முடன் இல்லை.

அவரது இழப்பின் துயரை அவரது குடும்பத்தினருடன் நாமும் பகிர்ந்து கொள்கிறோம்.

நன்றி-நிகரி-மார்ச்-2002



படிப்பகம்

www.padippakam.com

# நினைவுக் குறிப்பு

இந்தி

அன்புள்ள அங்கிளுக்கு,

உங்களை பற்றி நான் எதை எழுத...?

நித்தமும் குங்கும நிறத்தில் ஒரு றோஜாவையாவது தந்திடும் உங்கள் வீட்டு மொட்டை மாடியிலுள்ள சிறு பூந்தோட்டம். மின்சார வெட்டின் போதும் காற்றுக்கோ பஞ்சமில்லை. இயற்கையை தொலைத்த கொழும்பு நகரின் சீமெந்து வனாந்தரத்தில் இன்னும் பசுமை உயிர்வாழும் கூடமாக உங்கள் இதயங்களைப் போன்றே அந்த சின்ன மொட்டை மாடி பசுமையை வாழவைத்திடுகிறது.

இயற்கையோடு பிணைந்ததனால் தான் என்னவோ பசுமையான மனிதம் உங்களிடம் என்றும் வற்றாது சுரந்தது.

உங்கள் ஐந்து பிள்ளைகளுக்கு மாத்திரமல்ல எனக்குமே நீங்கள் தந்தையானீர்கள். எனக்கு அன்பை வழங்கும் மனிதர்களை கொண்ட குடும்பத்தில் நீங்கள் முதன்மை உபசரிப்பாளர். பசித்தோருக்கு அமுதம் வழங்கும் வற்றாத சுரபி போல் உங்கள் குடும்பம் வருவோர் அனைவரையும் தனக்குள் ஈர்த்து அவ்விதயங்கள் ஒவ்வொன்றும் தனது குடும்பமாக உங்கள் குடும்பத்தை உரிமையுடன் உணர்ந்திடு மளவுக்கு அன்பமுதம் உங்கள் இல்லத்தில் சுரந்திடும். அந்த



உயர்ந்த மனிதத்திற்கு நீங்கள் வழிகாட்டியாயிருந்தீர்கள்.

அங்கிள், இன்று நீங்கள் இல்லாததன் வெற்றிடத்தை ஆழ்ந்த துயருடன் உணர்கிறேன். ஒரு அன்பான தந்தையின் கரிசனைகளை நான் இழந்து போய்விட்டதை உணர்கிறேன்.

உங்கள் அன்பான பராமரிப்புகளையும் அக்கறைகளையும் என் சிறு பேனாவால் வெளிப்படுத்திட


படிப்பகம்

www.padippakam.com

முடியாது. அவற்றை என்னையும் என்னைப் போன்றே உங்கள் அன்பிற்குப் பாத்திரமான இன்னும் பலரினதும் நெஞ்சங்கள் சுமந்திடும்.



உங்களுடன் பரிமாறிக் கொள்ளக் கிடைத்த அறிவார்த்தமான உரையாடல்களைப் பற்றி நினைவு கூற இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்வதை எனக்குக் கிடைத்த பெருமையாகக் காண்கிறேன்.

உங்களது எளிமையான வாழ்வில் உழைப்பிற்காக நீங்கள் நடாத்தும் அன்றாட முயற்சிகளுடன் அறிவுத் தேடலையும் ஒரு அங்கமாகக் கொண்டிருந்ததை உங்களுடன் நெருங்கிப் பழகியவர்கள் அறிவார்கள். உங்களின் அறிவுத் தேடலில் நான் பெரிதும் பயன்பெற்றவளாயிருந்தேன் என்பதையும் இங்கு நினைவு கூர்கிறேன்.

தினமுரசில் தொடராக வெளிவந்த சமூக விஞ்ஞான ஆய்வமைப்பின் கட்டுரைகளை நீங்கள் சேகரித்து வந்தீர்கள். தினக்குரல் எனக்கு வாசிக்க சந்தர்ப்பம் கிடைக்காத நாட்களில் அங்கிள் கட்டுரைகளை சேகரித்து வைத்திருப்பார் எனும் நம்பிக்கையில் நான் இருந்துவிடுவேன். மறுநாள் கட்டுரையை உங்களது சிறிய ஆவணக்காப்பகத்தில் இருந்து பெற்றுக் கொள்வேன். அதுபோல பல கட்டுரைத் தொடர்கள் அவற்றின் ஒழுங்கு வரிசை தப்பாது உங்கள் சேகரிப்பில் உள்ளன.

தினசரி பத்திரிகை வாசிக்க முடியாது போன நாட்களில் நடப்புச் செய்திகளை உங்களிடமிருந்து அறிந்துகொள்ள முடிந்தது. அது மட்டுமல்ல, நான் அறிந்திராத பல வரலாற்று முக்கியத்துவமான தகவல்களான ரோகன விஜேவீர வழக்கு, குட்டிமணி வழக்கு போன்றவற்றின் விபரங்களையும் நான் உங்களிடமிருந்து தெரிந்து கொள்ள முடிந்தது. இப்படிப் பலப் பல. . .

இன்று நான் உங்களை இழந்தேன். உங்களுக் கூடாக எனக்குக் கிடைத்த அறிவையும் தகவல்களையும் இழந்தேன்.

உங்கள் நினைவுகள் எம்மிடம் என்றென்றும் வாழும். நீங்கள் இளைப்பாறுக.





படிப்பகம்

www.padippakam.com

# நினைவுகள் அழிவதில்லை

—நடராசா சரவணன்



நினைவுகள். பசுமையானவை. சுவையானவை. அது போல அவை கொடுமையானவையும் அவலமானவையாகவும கூட. மனதை அதிகளவு நெருடுபவையாகவும் இருக்கின்றன. நினைவுகள் அனைவரதும் வாழ்க்கையில் முக்கியமான அங்கமாக இருக்கிறது. அனைவரதும் வாழ்க்கையில் பிரிக்க முடியாத பதிவுகள் அவை. நினைவுகளுக்கும் கனவுகளுக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன.

நினைவுகள் யதார்த்தமானவை. உண்மையானவை. கடந்த காலங்களை பதிவுகளாக எம்முன் கொண்டு வந்து சேர்ப்பிப்பவை. உணர்வுகளோடு புரண்டெழுபவை. கனவுகளோ புனைவானது, மாயையானது, போலியானது... அவை உண்மையாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை.

நமது மனப்பதிவுகள் அனைத்தும் பசுமையானவை என்றில்லை. அப்பதிவுகளைத் தாங்கிய அந் நினைவுகளுக்கு வெவ்வேறு பரிமாணங்கள் உள்ளன.

நினைவுகள் ஒவ்வொரு மானுட ஜீவிக்குள்ளும் உறைந்து கிடப்பவை. ஆனால் உறங்காதவை. உயிர்ப்புள்ளவை.

போரினால் சிதைவுற்றிருக்கின்ற நமது தமிழ்ச் சமூகத்துக்கு, பல இழப்புகளையும் கடந்து அவ் இழப்புகளும், துயரமும் அவலமும் மிக்க மனப்பதிவுகளையும் ஊடறுத்து அதனிடையில் தெரிகின்ற பசுமையான நினைவுகள் உள்ளத்தை சிலிர்க்கவும் செய்யும். அந்த பசுமைகளின் இழப்புகள் குறித்த நினைவுகள் பெரும் ஏக்கத்தை ஒருபுறமும் இழந்த சந்தோசங்கள் குறித்த விரக்தி கலந்த தவிப்புகள் இன்னொரு புறமுமாக பெரும் துயரத்தையும் தந்துகொண்டிருக்கும்.

ஒன்றை இழக்கின்ற போது, அல்லது பிரிகின்ற போது அவற்றுடனான முன்னைய அனுபவங்கள் நினைவுகளாகின்றன.


படிப்பகம்

www.padippakam.com

நினைவுக்கு கொண்டு வரும் காரணிகள் பல இருக்கின்றன. நபர்கள், இடங்கள், இசை, மணம், காலநிலை போன்றன நினைவூட்டலை ஏற்படுத்துகின்றன.

சில நேரங்களில் சில மனிதர்கள் நமக்கு குறிப்பான நினைவுகளை ஏற்படுத்துகிறவர்களாய் இருக்கிறார்கள். சில மணங்கள் அதற்கு முன்னர் அப்படிப்பட்ட மணம் நுகர்ந்த போது நிகழ்ந்த நிகழ்வு குறித்த மனப்பதிவை நினைவுக்கு கொண்டுவரும். சில இசை அல்லது பாடல்கள், பாடல் வரிகள், அல்லது ராகம் குறிப்பான பசுமையான அல்லது சோகமான நினைவுகளுக்கும் கொண்டு செல்லக்கூடும். சில வகை காலநிலை மழை, இடி, மின்னல், முகில், இருள், மந்தம் என்பன கூட இப்படியான நினைவுகளை ஏற்படுத்த வல்லவை. சில இடங்கள், அல்லது மண், என்பனவும் இதே பாத்திரத்தை ஆற்றும்.

பருவங்களும் பருவ கால பண்புகளும், பருவ கால வாழ்க்கை முறைகளும் நமக்கு நிறைய நினைவுகளை சொல்லும். ஓடித்திரிந்த காலம், பள்ளிக்காலம், தமது காதல் பருவ காலம், நண்பர்களுடன் கூடித்திரிந்த காலம் என்பன நம்மனைவருக்கும் நெஞ்சை விட்டகலா பசுமைகள். வயது கடந்த நிலையில் பலர் தமது எஞ்சிய காலத்தை நினைவுகளே வாழச்செய்யும். தமது நினைவுகளை ஏனையோருடன் பகிர்ந்துகொள்வதில் அலாதியான சந்தோசத்தையும் ஆனந்தத்தையும் அடைவார்கள். அந் நினைவுகளை பகிர்ந்து கொள்ள கிடைக்கின்ற நபர்களில் அதிக விருப்பம் கொள்வார்கள்.

தேசப் பிரச்சினையின் விளைவாகவும், யுத்தத்தின் காரணமாகவும் இடம்பெயர்ந்த, புலம்பெயர்ந்த அனைவருக்கும் தமது மண் குறித்தும் மண்ணின் வாசனை குறித்தும், ஊரும், சூழலும், அயலவர் தம் நினைவுகளும் மனை அனைத்தும் பசுமையானவையாக நிற்கும். தாயகத்திலிருந்து பிடுங்கப்பட்டு இத்தனை வருடங்களின் பின் அவர்களுக்கு எஞ்சியிருப்பது அந்த நினைவுகள் மாத்திரம் தான். உருக்குலைந்து போன ஊரும், உறவும் கண்டிருக்கிற புதிய கோலத்தை மனம் ஏற்றுகொள்ள முடியாத துயரகரமாக இருக்கும். பழைய ஊர் தமக்கு கிடைக்காதா? பழைய பருவம் திரும்பாதா? பழையவர்கள் உயிர்க்க மாட்டார்களா? பழைய குதூகலம் வந்து சேராதா? என ஏங்கும் நம்மவர்கள் எங்கில்லை?

எஞ்சிய வாழ்க்கையின் மீதான பற்றை இந்த நினைவுகள் தான் தாங்கிக் கொண்டிருக்கும். எஞ்சிய வாழ்க்கையின் மீதான நம்பிக்கையே இதில் தான் தங்கியிருக்கும். எண்ணிக்கையில் சிறிய அளவே இதற்கு மாறான நிலைமை இருக்கும்.

இப்படியாக ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு மாறுகின்ற போது அந் நிலையிலிருந்து அடுத்த நிலைக்கு அந்த நினைவுகளும் கடத்தப்படுகின்றன. ஆனால் நினைவுகள் சந்ததிக்கு சந்ததி கடத்தப்பட முடியாதவை. நினைவுகள் அத்தனை உயிர்ப்புள்ளவை. உணர்வுபூர்வமானவை. அத்தனை அனுபவபூர்வமானவை.

ஓயா நினைவுகள்... அலையலையாய் களஞ்சியமாக இருப்பு கொண்டிருப்பவை. சமயத்தில் வெளிவந்து வலிமையையும் ஏற்படுத்தும். வலியையும் ஏற்படுத்தும்.


அவரவர் தான் வாழும் வாழ்வின் மீதான பிடிப்பு மற்றும் பிரக்ஞையைப் பொறுத்து பண்பிலும் அளவிலும் நினைவுகளின் மீதான ஐக்கியமாதல் வேறுபடும்.

சிலர் அந் நினைவுகளுடன் சங்கமிப்பர். சிலர் அந் நினைவுகளிலிருந்து மீள வழி தேடுவர். சிலர் தன்னாலேயே சிரிப்பார். சிலர் தனக்குள்ளேயே அழுவர். சிலர் நினைவுகளால் ஆத்திர படபடப்புக்குள்ளாவர். இப்படி



படிப்பகம்

www.padippakam.com



தனிமையிலேயே உணர்வு மேலிட ஐம்புலன்களும் தனக்குள் கதை பேசிக்கொள்ளும்.

நினைவுகள் - ஒருவர் தான் கொண்டுள்ள ஆளுமை பிரக்ஞை உளப்பலம் என்பவற்றின் பண்பு, அளவு என்பனவற்றைப் பொறுத்து மனநோயாளியும் ஆகலாம், சிறந்த மனதிடம் கொண்ட போராளியும் ஆகலாம்.

நமது மரபில் நினைவு கொள்ளல் என்பதானது பண்பாட்டினதும், சமூக அமைப்பினதும் ஒரு அங்கமாகவே இருந்து வருகிறது. நமது கல்வி முறையில் மனனம் செய்யக்கோரும் நடைமுறை வழக்கில் உண்டு. புராணங்களைப் புனைந்து வழிவழியாக கடத்தி அதனை உண்மையாக நிறுவுவதிலும் நினைவு பங்காற்றுகின்றன. அது போல சமயச் சடங்குகளாகவும், மதம் சார்ந்த நாளாகவும் நினைவுகள் திகழ்கின்றன. சிறு தெய்வ வழிபாடு உள்ள சமூகங்களில் அவை ஒரு நினைவு நாள் எனும் சாராம்சத்தையே அதன் பின்புலமாக கொண்டிருப்பதை காணலாம்.

அனைத்துக்கும் மேல் இன்றைய தேசப் போராட்டம் பல இழப்புகளையும் சந்தித்துவிட்டுள்ள ஒன்று. பலரது அர்ப்பணிப்புகள், தியாகங்கள் நிறைந்த வீரமிக்க போராட்டத்தில் நினைவுகள் என்பதானது மகத்தான பங்கை ஆற்றுகிறது. அவை ஒரு அடக்குமுறையின் கொடுமையை நினைவூட்டுவதாகவும், அதற்கான வீரஞ்செறிந்த மரணங்களையும், மக்களதும், தேசத்தின் சொத்துக்களையும் சின்னங்களையும், குறியீடுகளையும் கூட நினைவு நாட்களாகவும், நினைவுக்குரியவர்களாகவும், நினைவுச் சின்னங்களாகவும், நினைவுப் பொருட்களாகவும் கொள்கின்ற ஒரு தன்மையை காண்கிறோம்.

இப்படியாக "நினைவு" என்பதானது சமூகத்திலும் தனி நபர்களிலும் ஏற்படுத்தும் தாக்கமும் ஆற்றும் பாத்திரமும்ம் குறைத்து மதிப்பிடக்கூடியவை அல்ல.

அந்த வகையில் நமக்கெல்லாம் இழப்புகள் சொல்லும் கதைகள் ஏராளம். இழப்புகளினால் நொந்து நொடிந்து போகிற போது அதன் மீது நினைவுகள் ஒரு எதிர்மறையான பாத்திரத்தை ஆற்றுகின்றன. அதுவே மீளவும் எழுவதற்கு ஊக்கியாக இருக்கக்கூடியவையாக இருப்பின் அது நேர்மறையாக பாத்திரத்தை ஆற்றுகிறது. இழப்புகளோடு சேர்ந்து வரும் நினைவுகள் கொடுமையானவை. அது உன்னதமானது அல்ல. அது வேதனையும், விரக்தியும், சோகமும், அவலமும், துயரமும் நிறைந்த கொடுமை.

ஆக,

நினைவுகள் அழிவதில்லை



படிப்பகம்

www.padippakam.com

# நீயும்... நானும்...

கோமதி

வாழ்வின் துணையாக வந்தவனே
வாழ்கிறேன் உன் நினைவுகள் சுமந்து
கனத்த நெஞ்சுடன்

யாருக்கு தெரியும் நான் பிறந்தநாள்
எதுவென
பெற்றவளும் அறிந்திலாள்,
அப்பனும் குறித்துவைத்திட மறந்திட்டான்
அரசாங்கப் பதிவிலும் கோமதியின்
பிறந்தநாள்
இல்லாத ஒன்றுதான்

பதியப்படாத ஒருநாளாக
கொண்டாடப்படாத ஒரு நாளாக
ஒவ்வொரு வருடமும் ஏதோ ஒரு
தினத்தில்
என் பிறந்தநாள்
கடந்து போகும் நாளாயிற்று

எனக்கோர் பிறந்தநாள்
செய்திட
உனக்குத்தான் எத்தனை ஆசை
பிள்ளைகள் உட்பட வீட்டில்
அனைவருக்கும்
பிறந்தநாள் கொண்டாடப்படுகையில்
என் பிறந்த நாளை தெரியாத உன்
நெஞ்சத் தவிப்பும்
இதைய ஏக்கமும் எனக்குப் புரியாதா
என்ன?

எங்கெல்லாம் தேடித் திரிந்தாய்
யார்யாரையெல்லாமோ கேட்டுப் பார்த்தாய்
....

அற்புதம் நிகழ்ந்தது போல்
இந்த வருட ஆரம்பத்தில்
உனக்கது தெரிய வந்தது.
எனக்குமே நான் பிறந்தநாள்
தெரிந்திட்டது
அதுவும் உன்மூலமாக.

களுத்துறை,
நான் பிறந்த இடம்.
உரையாடுவது உனக்குப் பிடித்தமானது
தானே
இம்முறையும் களுத்துறை சென்றபோது
அயல்வீட்டாருடன்
உன் வழமையான அளவலாவல்கள்
....

அப்பொழுது தான் நீ தேடித் திரிந்த
உண்மை,
உன் நீண்ட நாள் தேடலின் பலன்
உனக்குக் கிடைக்கப் பெற்றது.

எங்கள் அயல் வீட்டுப் பெண்ணும்
நான் பிறந்த தினத்தன்றுதான்
நான் பிறப்பதற்கு இரண்டு
மணித்தியாலங்களுக்கு
முன்னர்தான்
ஒரு பெண் குழந்தையை
பிரசவித்திருக்கிறாள்
என் மகளுக்கும் கோமதிக்கும் ஒரே
வயது.
அவர்கள் இருவரும் பிறந்தது ஒரே
நாளில்
நீண்ட நாள் இரகசியமொன்று
அவிழ்க்கப்பட்டதான
படபடப்பில் நீ.



படிப்பகம்

www.padippakam.com

அயல் வீட்டுப் பெண்ணுக்கு பிரசவம்
நடந்த தினந்தான்.
அவளுக்கு பெண் குழந்தை பிறந்த
தினந்தான்
நான் பிறந்த தினம் என்பதை நீ
தெரிந்துகொள்ள
உனக்கென்ன அத்தனை
நாழிகையாகிடுமா?

மார்ச் 13ஆம் திகதி
நான் பிறந்த நாள்

எத்தனை குதூகலிப்பு உனக்குள்
அதனை உன்வாழ்வின் அரிய கண்டு
பிடிப்பாக
பூரித்தே போனாய்.

பிள்ளைகளுக்குமே ஆச்சரியம்

அடுத்து வந்த நாட்கள்

அம்மாவின் பிறந்தநாளை முதல்
முறையாக
கொண்டாடப் போகிறோம் என்பதுதான்
கதையாயிற்று.

அதற்கிடையே காதலர் தினம்
அதுவும் வந்தது.
காதலர்கள் பூக்கொடுத்துக் கொள்வதாக
பிள்ளைகள் கதைத்துக் கொண்டார்கள்.
ரி.வி.யிலும் ஏதோவெல்லாமோ
காட்டினார்கள்
நாங்களும் 35 வருடங்களாக
காதலிக்கிறவர்கள் தானே
ஏன் நாங்கள் காதலர் தினம்
கொண்டாடினால் என்ன?
அன்றைய காலை
நம்வீட்டு பூச்சாடியில் பூத்திருந்த
பெரிய றோஜாப் பூக்களையெல்லாம்
அப்படியே விட்டு
சின்னச் சாடியில் பொட்டு வைத்தாற் போல்
றோஸ் நிறத்தில் பூத்திருந்த சின்ன பேபி
றோஸ்
பூக்கள் இரண்டைப் பறித்து
உன் சட்டைப் பையில் வைத்தேன்.
“யாருமே தன் காதலிக்கு அளித்திராத
பரிசை



இந்தக் காதலர் தினத்தில் உனக்கு
தருகிறேன்”
எனக் கூறி வானை வாங்கி வந்தாய்.
நமது வயதை ஒத்த நம் உறவுக்
குடும்பங்களில்
காதலர் தினம் கொண்டாடிய
முதல் காதலர்கள் நாமாகத் தானிருப்போம்.

அதுவும் நமக்கு முதலும் கடைசியுமான
காதலர் தினமாயிற்று.

பின்னர் மார்ச் மாதம் வந்தது.
எனது பிறந்த நாளை கொண்டாடுவதற்காக


படிப்பகம்

www.padippakam.com

அமைதியான தயாரிப்புக்களில்
இறங்கினாய்.
நீண்டநாள் சிநேகிதி ஒருத்தியை
விருந்துக்கும் அழைத்தோம்.

12ம் திகதி.
எனது பிறந்த நாளுக்கு முதல்நாள்.
என் வாழ்வில் முதன் முதலாக
பிறந்த தினத்தை கொண்டாடப் போகும்
நாளுக்கு
மூத்த நாள்.

ஒரு நாளும் இல்லாத அதிசயமாய்
எந்த கடையில் என்ன பொருட்கள்
வாங்குவதென
எனக்கு ஒவ்வொரு கடைகடையாய்
காட்டி வந்தாய்
கடையெல்லாம் பார்த்துவிட்டு
கடைசியில் வீடு வந்து சேர்ந்தோம்.

மறுநாள் பிறக்கப் போகும் எனது
50வது பிறந்தநாளை,
முதன் முறையாக நான் சந்திக்கப் போகும்
எனது பிறந்தநாளை
நீதான் எத்தனை ஆர்வமுடன்
எதிர்பார்த்திருந்தாய்.
அன்றைய மாலை அனைவரையும்
கோயிலுக்கு வானில் அழைத்துச் செல்ல
தீர்மானித்துமிருந்தாய்.

அந்த எதிர்பார்ப்புக்களுடன் வானைக்
கழுவச் சென்றாய்
தேநீர் ஊற்றச் சொல்லிவிட்டு.

காத்திருந்தேன் ஒரு மணித்தியாலமாக
நீ வான் கழுவிவிட்டு தேநீர் குடிக்க
வருவாயென.

நேரந்தான் கடந்தது.
அயல் வீட்டுச் சிறுவன் ஓடிவந்து
சொன்னான்
என்றுமே சரிந்திராத நீ வாசலில் சரிந்து
கிடப்பதாக


அந்த பொல்லாத நாளில்
உனக்கான தேநீருடன் நான் காத்திருந்த
வேளையில்
என்னிடம் சொல்லிக்கொள்ளாமலே
போய்விட்டிருந்தாய்.

ஐயா . . .
29 வருடங்கள் நாம் வாழ்ந்திருந்தோமே
ஆனந்தக் குதூகலிப்பும்
கொப்பளிக்கும் கோபப் பரிமாறல்களும்
பொங்கிடும் அழுகையும்
இன்பச் சிரிப்புமாய்
நாம் வாழ்ந்திருந்தோமே

நான் தெரிந்திராத ஒரு பிறந்தநாளை
எனக்கு அறிமுகப்படுத்திவிட்டு
அந்த நாள் விடிவதைக் காணாமலேயே
போய்விட்டாயே

உன்னுடன் களித்திட எனக்கோர்
பிறந்தநாள்
இனியும் வருமோ?

**எழுத்து வடிவம் - ராஜினி**






படிப்பகம்

www.padippakam.com

# நெஞ்சம் கனக்கிறது...



நடா ஐயா
உங்களுக்கும் எனக்குமான
நட்பின் அடையாளப்படுத்தல்
நினைவு கூறும் போதெல்லாம்
நெஞ்சில் கனக்கிறது !

உங்கள் மறைவிற்கு
இரண்டொரு தினங்களிற்கு முன்னர்
நீங்களும் நானும்
ரஜீவன், சேந்தன், பார்த்தீபன்
ஒன்றாய்க் கூடியிருந்து
நீண்ட நேரம் நிறையவே பேசினோம்
!
சமூகம், அரசியல், கலை இலக்கியம்
இன்னுமென்னென்னவோ . . .
நேற்றையைப் போலவே இருக்கிறது
அந்த நினைவுகள் ஒவ்வொன்றும்

வாழ்ந்துவிட்டுப் போதல்
சுகமே எனினும்
பிரிதலின் துயரங்கள்
கொடூரமானவையே
நிஜமாய் உணர்கின்றோம்
உங்களது நினைவுகள் வந்துபோகிற
போதெல்லாம் !

உங்களுக்குள் உள்ளிருந்த
சமூக அரசியல் வெளிப்பாட்டின்
உள்ளார்த்தத்தை கேட்ட
போதெல்லாம்
வியந்துதான்
போனோம்
சமூகத்
தேடல்களுக்கு
தேவையான
எத்தனையோ
விசயங்களை
உள்ளே
கொண்டு
திரிந்த மனிதனாய்
உங்களை எத்தனை பேருக்கு
தெரியும் ?

இலகுவில் அடையாளம்
கண்டுகொண்ட
பின்னர்தான் உங்களுக்கும்
எங்களுக்குமான நட்பு
இன்னும் நெருங்கியது

ஒரு நண்பனின் அப்பாவாகவே
முதலில் உங்களை
இனங்கண்டேன்
இன்றோ . . .
ஒரு நண்பனின் பிரிதலாய்
உங்கள் நினைவுகள்
வந்துபோகின்றன !

**பி. ரவிவர்மன்**
**ஆசிரிய பீடம், தினக்குரல்**


படிப்பகம்

www.padippakam.com

# இழப்புகளினூடே...

நந்தினி

90களின் ஆரம்பப் பகுதியில் ஸ்திரி (பெண்) எனும் சிங்கள திரைப்படம் வெளிவந்தது. சிங்கள சினிமாவில் அதிர்வை ஏற்படுத்தியதாக இப்படம் அமைந்தது. கதாநாயகியாக மாலினி பொன்சேகா நடித்திருந்தார். சமூக விதிமுறைகளுக்கு சவால் விடும் முதிய பெண்ணொருவரின் வாழ்வைப் பற்றியதே இத்திரைப்படம். கதையின் நாயகி தனது இளம் வயதில் இருந்து ஒரு கன்றுக் குட்டியை பிள்ளைபோல் வளர்த்து வருகிறாள். அவள் முதிய வயதை அடைய அதுவும் வளர்ந்து திடகாத்திரமான காளை மாடாகிறது. அவளுக்கிருந்த நெருக்கமான உறவு இந்த மாடுதான். அவள் அதனுடன் உறவாடுவாள். தனது கவலைகளை மனதின் சிறிய மகிழ்ச்சிகளை எல்லாம் அதற்குக் கூறுவாள். அதை மகனே என்றுதான் அழைப்பாள்.

அவளின் இந்த ஒரே உறவை கசிப்பு வடிப்பவன் ஒருவன் களவாடிச் சென்று அறுத்துவிடுகிறான். தன் வாழ்வின் அடித்தளமே சிதைந்து போனதாக அவள் உணர்கிறாள். அவளால் அந்த இழப்பை தாங்கிக் கொள்ள முடியாது போகிறது. அந்த இழப்பை ஈடுகட்ட தன் மகனும் நண்பனுமான மாட்டைக் கொன்றவனை பழிவாங்குகிறாள். இழப்பின் ஆழத்தை மிகவும் நுட்பமான முறையில் சித்தரிப்பதாக இப்படம் அமைந்திருந்தது.

உயிருள்ளவற்றுடன் மாத்திரமல்ல தம்மைச் சூழவுள்ள உயிரற்ற மரஞ்செடிகளுடனும் மனிதர்கள் தொடர்பு கொண்டு உறவாடுகின்றனர். செடி வளர்ந்து பூத்துக் காய்க்கையில் மகிழ்வதும், அச்செடி மடிகையில் துயருறுவதும் மனிதருக்கும் இயற்கைக்குமான உறவின் உணர்வு வெளிப்பாடாக உள்ளது. செடியின் மடிவால் துயருறுவதானது தான் நேசித்த ஒன்றை இழந்த மனித மனதின் ஏக்கம்தான்.

மனிதர்கள் வெறுமனே பருப்பொருள்கள் மாத்திரம் அல்ல. ஜீவத்துடிப்பான உணர்வுகளின் தொகுப்பாயும் மனிதர்கள் இருக்கிறார்கள். அதனால் தான் சிரிக்கவும் அழவும் ஆத்திரமுறவும் கருணைகொள்ளவும் மனிதர்களால் முடிகிறது. உணர்வுள்ள மனிதர்களால் தான் தம்மையும் தம்மைச் சுற்றியுள்ளவர்களையும் ஒட்டுமொத்த மனிதகுலத்தையும் இயற்கையையும் நேசிக்க முடிகிறது. நேசிக்க முடிந்த மனிதர்களால்தான் இழப்புகளை உணர முடிகிறது. தாம் வாழும் சமூகத்தை நேசிக்கும் மனிதர்களால்தான் சமூகம் சிதைக்கப்படுவதைக் கண்டு, சமூகத்தின் இழப்பைக் கண்டு துடித்தெழ முடிகிறது. போராட முடிகிறது.

உறவுகளின் இழப்பு என்பது மனிதர்களின் உணர்வுகளை ஆழச் சிதைப்பதாகும். எந்தளவிற்கு ஒருவரை நேசிக்கிறார்களோ அவரது இழப்பு குறித்த ஏக்கமும் வேதனையும் மிக அதிகமாயிருக்கும். மனிதர்கள் மனிதர்களாக இருப்பதனால்தான் அவர்களால் தமது துயரங்களை தாங்கிக் கொண்டு தம்மைவிட்டு பிரிந்தவர்களின் நினைவுகளை மனதில் சுமந்தபடி மீளவும் எழுந்து நிற்கவும் முடிகிறது. மீண்டும் மீண்டும் சிரிப்பும்



படிப்பகம்

www.padippakam.com

அழுகையும் கோபமும் கருணையும் கொண்ட மனிதர்களாக வாழ்ந்திட முடிகிறது.

உணர்வுள்ள மனிதர்களாக இருப்பதனால்தான் சுகந்தி, சரா, கல்யாணியால் தம் தாயின் துயரத்தை புரிந்துகொள்ள முடிந்தது. துணைவரின் இழப்பால் உடைந்து போயிருக்கும் தாயின் உணர்வுகளை சமூக சடங்குகளால் சிதைக்காது பாதுகாத்திட முடிந்தது.

குடும்ப உறவுகள் என்பன அத்தனை இலகுவில் முறித்துக் கொண்டு வெளியேற முடியாதன வாகும். மகிழ்ச்சியான நிகழ்வுகளிலும் துயர சம்பவங்களின் போதும் உறவுக் குடும்பங்கள் திரள்வதும் நிகழ்வுகளில் உரிமையெடுத்துக் கொள்வதும், தமது உறவின் வலிமையை நிலைநாட்ட சடங்கு சம்பிரதாயங்களை முன்னின்று நடாத்துவதும் சமூக வாழ்வில் ஒரு அங்கமாக உள்ளது. நிலவும் சமூக வாழ்வின் பிற்போக்கான அம்சங்களுடன் முறித்துக் கொண்டு முற்போக்காக வாழ முயலும் நபர்களுக்கு இவ்வாறான குடும்ப நிகழ்வுகளின் போது திரளும் உறவுகள் ஒரு சவாலாக உள்ளன. தனிநபர்களான இவர்கள் தமது குடும்ப உறவுகளை எதிர்த்து நிற்க முடியாது நடப்பது நடக்கட்டும் என வாழாவிருந்து விடுகின்றனர். பின்னர் "முற்போக்கு" நண்பர்கள் வட்டம் இவர்களை விமர்சனங்களால் துளைத்தெடுப்பதும், விமர்சனத்திற்குள்ளாபவர் கூனிக் குறுகி போவதும் வழமையாக நடைபெறும் முற்போக்கு அவலமாகும்.

சில மலையக வம்சாவழிக் குடும்பங்களிடையே மரணச் சடங்குகள் என்பன மிகவும் சடங்குமுறையுடன் கூடியதாக நடைபெறுவது வழமை. குறிப்பாக "தாலி அறுத்தல்" எனும் சடங்கு ஒரு கட்டாய சடங்காக உள்ளது. பெண்ணின் உணர்வுகளை சிதைத்து அவளை "விதவை" என சமூகத்திற்கு அறிவித்திடும் இச்சடங்கை குடும்ப உறவுகள் முன்னின்று நடாத்துவார்கள். ஏற்கனவே உணர்வுகளால் நசிந்து போயிருப்பவளை மேலும்




உணர்வாலும் உடலாலும் புண்படுத்தும் சடங்காக இதுவுள்ளது.

இத்தகையதொரு துன்பத்தை ஒரு போதும் தமது தாய்க்கு ஏற்படுத்திட சராவும் சகோதரிகளும் அனுமதிக்கவில்லை. தந்தையின் இழப்பால் உணர்வுகள் சிதைந்திருந்த அந்த சந்தர்ப்பத்திலும் தமது உறவுகளுடன் வாதாடி தாலி அறுத்தல் சடங்கை நடைபெறவிடாது தடுத்து நிறுத்தினர். சமுதாயத்தின் புண்படுத்தலில் இருந்து தமது தாயை காத்துக் கொண்டனர். உணர்வுள்ள மனிதர்களாக இருப்பதினால்தான் இவர்களினால் இந்த இழப்பின் துயரத்தின் மத்தியிலும் அடக்குமுறை சடங்கு நடைபெறவிடாது எதிர்த்து நின்று தடுத்திட முடிந்தது. அதன் மூலம் தம் தந்தையாரை அவர்களால் கௌரவிக்க முடிந்தது.

இந்த உணர்வுள்ள மனிதர்களின் இழப்பின் துயரத்தில் நாமும் உணர்வுள்ள மனிதர்களாக பங்கேற்போம். நம் நட்பின் ஒத்தடத்தில் அவர்களின் இழப்புத் துயரை ஆற்ற முயல்வோம்.


படிப்பகம்

www.padippakam.com

# எங்களோடு என்றும் இருக்கிறாய்



வாழ்க்கைப் பயணத்தில் பல்வேறுபட்ட சந்திப்புக்கள் ஏற்படுவது யதார்த்தமானதே. அவற்றுள் கூட இன்பம், துன்பம் கலந்தே வருவது தவிர்க்க முடியாது.

எனக்கு இன்னமும் நடா உயிருடனிருப்பது போன்ற உணர்வே இருக்கின்றது. கவலையில் கூட சிரிக்கத் தெரிந்த மனிதன் அவன். மற்றவர் துயரத்தின் போது அவன் மனம் வெதும்பத் தவறியதில்லை.

மானுட நடா நண்பனாய், சோதரனாய், தந்தையாய் . . . இன்னுமின்னும் நின்று நிலைத்தவன். சரவணனுக்கு நடா தந்தை மட்டுமல்ல ஆத்தமார்த்த ஆத்மார்த்த தோழனாயக்கூட நான் கண்டு கொண்டேன்.

நல்ல கருத்துக்களை சொல்வதில் மட்டுமல்ல, நல்லவைவற்றை யார் சொன்னாலும் ஏற்கும் மனப்பக்குவம் கொண்டவன். எனக்கு அறிமுகமாகி ஓராண்டே ஆனபோதும் நெஞ்சுக்கு நெருக்கமாகியதில் வியப்பதற்கொன்றுமில்லை.

எப்போது வேண்டுமானாலும் நடாவை அழைக்கலாம். அப்போதெல்லாம் "அண்ணே நான் தயார்" என்றே பதில் வரும்.

நடா இன்று நீ எம்மிடையே இல்லை. கவலைதான். ஆனாலும் நீ எம்முள்ளே சதாவும் வாழ்ந்து கொண்டிருக்கிறாய். எனவே எம்மால் உன்னை மறப்பது இயலாத காரியம்.

உன் ஆத்மா ஆறுதலடைய இரு சொட்டுக் கண்ணீரையே இங்கு காணிக்கையாக்குகின்றேன்.

**எம். ஏ. எம். நிலாம்**
**தினக்குரல்**



படிப்பகம்

www.padippakam.com

# அப்பாவும் உயிர்த்தெழும் தினமும்

தயாநிதி

ஏப்ரல் மாதம் எனது நினைவில் நன்றாக இருக்கின்ற மாதம். இந்த மாதத்தில் நான் இருவரை இழந்து போனேன். 84 ஏப்ரல் எனது குடும்பத்திற்கு இறுதி புதுவருடமாக அமைந்திருந்தது. இதே ஆண்டில் எனது சகோதரன் காணாமல் போயினன். 86 ஏப்ரல் எனது அப்பாவும் அவரைத் தேடும் முயற்சியை வேறு உலகத்தில் தொடர்ந்தார். 84 பலத்த திருப்பத்தையும், இடப்பெயர்வையும் பலருக்கு அளித்தது. இந்த ஆண்டுதான் தம்பலகாமம் சுடுகாடாக்கப்பட்டதும்கூட. 84 ஆவணியில் பிற்பகல் ஒன்றில் நான் அப்பாவிடம் இருந்து விடைபெறுகிறேன். ஏல்லோரும் தம்பலகாமத்தைவிட்டு சூழவுள்ள இடங்களுக்கு இடம்பெயர்ந்து விட்டார்கள். ஆப்பா அசையவில்லை. பின்பு அவர் தம்பலகாமத்திற்கும், திருமலைக்குமாய் இடம் மாறிக் கொண்டிருந்ததாய் அறிந்தேன்.

எனக்கு அப்பாவை நன்கு தெரியாது என்றே சொல்ல வேண்டும். ஏனென்றால் நான் ஐந்தாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த போது சூழல் பாடத்திற்காய் நாங்கள் ஆசிரியரின் மேசை சுற்றி நின்று துறைமுகம் பற்றி படித்தபோது நான் எனது அப்பா கப்பலில் வேலை என்று கூறியதும். ஏன்னுடைய ஆசிரியர் இல்லை நீதிமன்றத்தில் என சொல்லித்தந்ததும் எனக்கு இன்னமும் நினைவில் இருக்கிறது. ஏனது உலகத்தில் அப்பா அவ்வப்போது விடுமுறைக்கு வருபவராக இருந்தார். அவர் வந்திருக்கும் வேளையில் எல்லாம் தடல்புடலாக இருக்கும் சமையல் தொடக்கம், அவருடன் உரையாட வரும் ஆட்கள் வரை:

தமிழரசுக் கட்சியும் தந்தை செல்வாவும் சுதந்திரன் பத்திரிகையின் அறிமுகமும் எனக்கு அவரால் கிடைத்தவை. அப்பாவுடன் நான் நேரடியாக கதைத்துக் கொண்டதாக எனக்கு நினைவில்லை. அம்மாதான் எங்களுக்குள் செய்தி காவுபவராக இருந்திருக்கிறார். இதுவும் நான் ஓஎல் எடுத்த வேளை என்று நினைக்கிறேன். ஆப்பா வெள்ளை சேட் வெள்ளை றவுசருடன் வெள்ளிக்கிழமை பிற்பகல் வந்து ஞாயிறு பிற்பகலில் வேலைக்குச் செல்பவராகவும் நினைவில் நிற்கிறார். இந்த நாட்களில் கூட ஏராளமான பத்திரங்களை வீட்டுக்குக் கொண்டுவருவார். நானும் அம்மாவும் கூட சிலவேளைகளில் சமன்ஸ்சுகளை அவருக்காக எழுதி பூர்த்தி செய்வதுண்டு.

அப்பா வீட்டிற்கு தலைவனாகவே இருந்திருக்கிறார். வீட்டில் அம்மாவின் எந்த வேலையையும் பகிர்ந்து கொண்டதாக எனக்கு நினைவில்லை. தானுண்டு தனது அலுவலகம், தமிழரசுக்கட்சி அரசியல் என காலத்தை கழித்திருந்தார். எங்கள் வீட்டு வைபங்களில் மாமாக்களின் திருமணம், அம்மம்மா, அம்மப்பாவின் மரண சடங்கு எல்லாவற்றிலும் அப்பாவுக்கு முதலிடம்



படிப்பகம்

www.padippakam.com

இருந்தது. அவர் யாருடனும் அந்த இடத்தைப் பகிர்ந்து கொள்ளவில்லை.

அப்பாவும் நானும் ஆற அமர இருந்து கதைத்துக் கொண்டோமோ என்று நான் அடிக்கடி யோசித்துப் பார்ப்பேன். அப்படியான கணங்கள் எனக்கு இன்னமும் நினைவில்லை. நாங்கள் கூட்டணி அரசியலுக்கு மாற்று அரசியல் பற்றி கதைத்துக் கொண்ட போது நானும் அண்ணனும் அவருடன் முரண்பட்டுக் கொள்வோம். சிங்களம் படிக்காமல், சம்பளஉயர்வும், பதவி உயர்வும், கிடைக்காத ஒரு சில எழுதுவினைஞர்களில் அப்பாவும் ஒருவர் என்றும் எமது வினைஞர் சங்கத்திலிருந்து பிள்ளைகளும் அப்பாவும் அரசியல் கதைக்க கூடாது என்ற சட்டம் எங்கள் வீட்டில் இன்றும் அமுலில் இருக்கிறது. 84 ஏப்ரலுக்குப் பின்பு நாங்கள் அவருடன் அரசியல் கதைக்கவிலலை என்பது மட்டுமல்ல அவர்களுடன் அண்ணாவுடன் நான் கதைக்கவேயில்லை. எனக்கு அப்பா ஒரு நல்ல மனிதன் என்று அடிக்கடி அம்மா சொல்லுவார் அப்பா எனக்காக ஒவ்வொரு வெள்ளியும் கண்டோஸ் வாங்கி வருவார். நான் திருமலையில் படித்த வேளையில் 4.45ற்கு ரியூசன் வகுப்புக்கு தவறாமல் அழைத்துச் செல்வார். சமூக அமைப்பு அவருக்கு வழங்கிய பாத்திரத்தை அவர் நன்றாகவே செய்திருந்தார் என்று நினைக்கிறேன்.

அப்பாவை எனக்கு தெரிந்தளவில் மதபற்றற்றவராக, துணிவுடையவராக மிகுந்த கோபமுடையவராக இருந்தார். அவர் பெருத்த குரலில் பேசுவார். கோபம் அவரது கூட்டாளி. அவர் எனக்கு அடிக்கடி சொல்லுகின்ற கதைகளில் சூரியன் குஞ்சி கதையும், பெருவிரல் மனிதன் கதையும் பிரபல்யமானவை. ஈழத்து அரசியல் பல நெருக்கடிகளையும் அழிவுகளை சந்திக்கின்றது. இழப்புக்கு முகம் கொடுத்ததில் நாம் அடங்குகிறோம். 84 ஏப்ரல் இல் திருமலையில் தொழிலிட்ட அன்னையின் மகன் ஒருவன் (அந்நிய) இராணுவத்தின் துப்பாக்கிக்கு பலியாகிறான். இந்த விடயம் அப்பாவை மிகவும் பாதித்திருக்க வேண்டும். அவருடைய நீதிமன்ற தொழிலுக்கும் புறச் சூழல் அரசியலுக்குமான முரண்பாடுகளுக்கு முகம் கொடுக்க முயன்றாரோ முயலவில்லையோ தெரியவில்லை. வேலையிலிருந்து ஓய்வு பெறுகிறார். இதுக்குப் பிறகு அப்பா நிறையவே மாறிவிட்டிருந்தார். கோயில், குளம், சனிக்கிழமை விரதம், கௌரிவிரதம் என தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டார். இதுக்குப் பிறகு இருந்த அப்பாவை எனக்கு தெரியாது.

96 ஏப்ரல் ஓர் உயிர்த்தெழுந்த நாளில் எனக்கு தகவல் வருகிறது என்னுடைய உறவினர் ஒருவரின் வழியாக "தயா அக்கா மாமா எல்லே மோசம் போட்டாராம்," நான் மறுமுனையில் இது யாரென ஆராயும் முயற்சியில் தோற்றுப் போகிறேன். அதிர்ச்சி என்று நினைக்கிறேன். அவர் தொடர்ந்து சொல்கிறார். அண்ணாச்சிக்கு அண்ணியின்ர அப்பா சொன்னவராம்" என முடிக்கிறார். நான் எதுவும் சொல்லவில்லை. தொடர்பை துண்டிக்கிறேன். சில கணங்களுக்குப் பின்பு மூளை இயங்குகிறது. இயந்திரமாய் அவருடைய மருமகனுக்கு தகவல் சொல்லிவிட்டு நான் தபால் கந்தோருக்கு தொடர்பு கொள்கிறேன். அங்கு வேலை செய்பவர் எனக்கு எனது தந்தையின் மரண அடக்கம் எப்போது என்பது பற்றியம் தாங்கள் நின்று சிறப்பாக இறுதி ஊர்வலத்தை நடத்துவதாகவும் சொல்கிறார். நான் மௌனமாய் இருந்துவிட்டு "அம்மாவுக்கு நான் எடுத்ததாக சொல்லுங்கோ" என்று



படிப்பகம்

www.padippakam.com

சொல்கிறேன். நான் திக்கு திசை தெரியாமல் நடக்கிறேன். என்னுடைய மனதில் எந்த உணர்வுமே இல்லை. என்ன செய்வது என்று தெரியாமல் எனது வடக்கில் இருக்கும் என் நண்பனுக்கு இதனை தெரியப்படுத்துகிறேன். அவன் அன்றே வருவதாய் உறுதியளிக்கிறான். அந்த பிற்பகலிலேயே வந்தும் சேர்கிறான். நான் அடுத்த நாள் மீண்டும் தபால்கந்தோருடன் தொடர்பு கொள்கிறேன். அவர் வேலை செய்பவர் எவ்வளவு சிறப்பாக மரண ஊர்வலம் முடிவடைந்தது என விபரிக்கிறார். நான் அவரிடம் "மாமியை கூப்பிட்டுவிட முடியுமா" என வினவுகிறேன். மாமியிடம் என்னுடைய ஆதங்கத்தை பகிர்ந்து கொள்கிறேன். எனக்கு அறிவிக்க யாருக்குமே தோன்றாமல் போனதும், நான் வரும் வரைக்கும் காத்திருக்காது விட்டோமே என்று யாருமே உணர்ந்ததாக இல்லை.

நான் இலங்கைக்கு வருகிறேன். சரியாக பத்து ஆண்டுகளின்பின். அம்மா என்னை வரவேற்கிறார். அம்மாவுக்கு வயது போய் விட்டிருந்தது. என்னைப் பார்ப்பதற்காய் வன்னியிலிருந்து கூட அம்மா சகோதரர் பாஸ் எடுத்து வந்திருந்தார். நீண்ட காலத்திற்குப் பின்பு மாமாமார் மாமிமார் நானும் கூடியிருக்கிறோம். நான் வந்ததிலிருந்து முகமன் வார்த்தைகளை தவிர வேறெதையும் கூறவில்லை. சம்பாசணை எங்கோ தொடங்கி என்னில் நிற்கிறது.

"நீ ஏன். அப்பான்ர செத்தவீட்டிற்கு வரவில்லை"

இது என்னுடைய மாமா.

என்னுள் எரிமலை வெடிக்கிறது.

"செத்தது என்ரை அப்பா, உங்கள் ஒருத்தருக்கும் எனக்கு அறிவிக்க வேணும் எண்டு தெரியேல்ல வரேல்லை எண்டு மட்டும் கேள்வி கேட்க

நான் உடைந்து போகிறேன்.

"அண்ணை தானே எல்லாருக்கும் அறிவிச்சார்" ..?

"ஓம் ஏன் தம்பி அவளுக்கு சொல்லேல்ல",

நான் ஒண்டையும் கவனிக்கிற நிலையில இருக்கேல்ல என்று அம்மா அழத் தொடங்குகிறார்.

மாமா ஒன்றும் சொல்லவில்லை. சிலவேளை நான் ஒரு ஆம்பிளை பிள்ளையாக இருந்திருந்தால் கொள்ளி போட வேண்டும் என்பதற்காய் நினைவு கூர்ந்திருப்பார்களோ? 84ல் நான் கதைத்த நான் கண்ட அப்பா என்னுள் இன்றும் அழியா உருவமாய். . .

(ஏப்ரல் 2002 கொழும்பு)





படிப்பகம்

www.padippakam.com

# அப்பா என்றொரு சொல்

அ.ரவி

சென்ற மாதம் இதே நாட்களில் அப்பா எங்களுடன் இருந்தார். எங்கள் உயிருடன் உயிராய்க் கலந்திருந்தார். என் மைந்தர்களுக்கு கதை சொன்னார். என் மனைவிக்குப் பாடக்குறிப்புகள் தேடினார். இரவில் பிந்தி வரும் எனக்காகக் காத்திருந்தார்.

இப்போது எண்ணிப் பார்க்கிபோது இறப்பதற்கு ஆறு மணித்தியாலத்திற்கு முன்னரும் எனக்காகக் காத்திருந்தார். இது குரூரமான ஆச்சரியம்.

புதன் கிழமை (05.07.95) இரவு பிந்தி வருகிறேன். வருகிற போது பதினொரு மணியிருக்கலாம். சற்று இருளான வெளிச்சத்தில் கதவடியில் காத்து நிற்கிறார். காலடிச்சத்தம் கேட்டவுடன் கதவைத் திறக்கிறார். பிந்தி வந்ததற்குக் கண்டிக்கிறார். சமாளிக்க முற்படுகிறேன்.

அடுத்த நாள் (06.07.95) எனக்குக் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழா (ஊழஎெழஉயவழைெ) அதற்காக வழங்கப்பட்ட பட்டமளிப்பு விழாவிற்கான மேலங்கியை (உடழயம) அப்பாவிடம் காட்டினேன். மகிழ்ந்தார். முன்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவிற்கு அப்பாவும் வந்திருந்தார். இப்போ வர முடியாத நிலை அவருக்கு. அம்மாவைக் கூட்டிச் செல்கிறேன் என்றேன். அப்பாவுக்கு மகிழ்ச்சியாக இருந்திருக்கும். யாமம் பன்னிரண்டு மணிவரை பலதைப் பற்றியும கதைத்தோம். பின் படுத்தோம்.

இரவில் ஆந்தை அலறவில்லை. நத்தை குரலெடுக்கவில்லை. ஆட்காட்டிக் குருவி அவலமாக ஒலிக்கவில்லை. பகலில் கூட அண்டங்காகம் கத்தியதாக அம்மா கூறவில்லை. நம் வீட்டைச் சா தேடி வருவதாக எந்த அறிவுறியும் தென்படவில்லை.

விடிய மூன்றரை மணிக்கு அப்பா என்னை எழுப்புகிறார். மூச்சுப் பறிகிறது. "எனக்கு ஏலாமல் இருக்கு... மூச்சு விட முடியேல்ல... நான் சாகப் போறன்.." என்று கூறுகிறார். நான் செய்ய வேண்டிய கடமைகளை எனக்கு உரைக்கிறார். மேலும் எதோ கூற முற்படகிறார்.

ஒன்றையும் நம்புகிற மனநிலையில் நான் இல்லை "ஒண்டுமில்லை... பேசாமல் படுங்கோ..." என்கிறேன். படுக்க வைக்கிறேன். அப்பா மீண்டும் எழுகிறார், கூறுகிறார், "எனக்கு ஏலாமல் இருக்கு..." நான் அப்பாவின் நெஞ்சைத் தடவியபடி "ஒண்டுமில்லை... படுங்கோ..." அம்மா, மனைவி அருகில் வந்து இருக்கின்றனர். சஞ்சயன், சஞ்சுதனும் எழும்பி விட்டார்கள்.

படுக்கிறார். சிவப்பு நிறத்தலையணையை எடுத்து நெஞ்சில் வைக்கிறார். அதன் மேல் கையைப் பதிக்கிறார். மறுகையால் என் கையைப் பற்றுகிறார். கண் செருகுகிறது. எனக்குப் பயம் வந்தது. பதட்டமடைகிறேன். 'அப்பாவுக்கு ஏதேனும் நடந்து விடுமோ?'

"அப்பா..." உலுக்குகிறேன். திடுக்கிட்டு கண்ணை முழிக்கிறார். பார்க்கிறார் பேச முடியவில்லை. கண்ணீர் ஒழுகுகிறது. பின் கண் செருகுகிறது. விட்டு விட்டு மூச்சு



படிப்பகம்

www.padippakam.com

அசைகிறது. நெஞ்சைத் தடவுகிறேன்..."அப்பா... அப்பா..."

மூச்சு விட்டு... விட்டு... பிறகு பரவாயில்லை.

அக்கா வந்து விட்டார். அம்மாவும் அக்காவும் குழறுகிறார்கள். மனைவி அதிர்கிறார். மைத்துனன் உடன் ஓட்டோவைக் கூட்டி வருகிறான். அத்தானும் ஓடி வந்து அப்பாவைத் தூக்கி ஓட்டோவில் ஏத்துகிறோம். அப்போது நேரம் 3.50 இருக்கும்.

ஆஸ்பத்திரிக்குச் சென்று என் பயன்? மரணத்தை வைத்தியர் மறுக்கவில்லை.

துயில்வ போன்று அப்பா இறந்தா்.

எங்களின், எங்கள் குடும்பத்தின், எங்கள் உறவினரின், எங்கள் சுற்றத்தவரின் தூண்போல இருந்த அப்பா சரிந்து விட்டார். கிளறிக் கிளறி லயிக்கிற நினைவுகள் அப்பாவினுடையவை.

கால் நூற்றாண்டுக் காலம் அப்பாவின் ஆளுகைக்குள்ளேயே வாழ்ந்தேன். வளர்ந்தேன்.

அம்மாவின் மடியில் குதித்த கதண்திலிருந்து, அம்புலி காட்டிச் சோறூட்டிய பருவத்திலிருந்து நிலவொளியில் மணல் பரப்பி சுட்டவிரல் தேய 'அ' எழுதிய காலத்திலிருந்து, சளி வழிய காற்சட்டை சறுக, வெள்ளம் அளைந்த பொழுதிலிருந்து, பிறகு, நெஞ்சு நிமிர்த்தி பல்கலைக்கழக வளவுள் கால் வைத்த காலம் வரை, அல்லது எனக்கென்றொரு துணையை நான் வரைந்த வாழ்வு வைர அப்பாவின் ஆளுகைக்கள் நான் வாழ்ந்தேன்.

எம் குடும்பமோ மிகச் சிறிது. நம் குடிலோ அதிலும் சிறிது. அப்பா, அம்மா, அக்கா, நான் அளவெட்டியில் ஒரு கொட்டில் சாமத்தில் மழை பெய்கிறபோது கூரை ஒழுகும் அம்மா விளக்கை ஏற்ற, அப்பா ஏடை பிடித்து நிற்பார்.

காலையில் அப்ாப எங்களை மிருதுவாக எழும்புவார். 'ராசா... பிள்ளை... நேரம் போச்சு. எழும்புங்கோ..." குசினிக்குள் அப்பா தேனீர் தரும் வரை காத்திருப்போம்.

மதியம் அப்பா பாடசாலை விட்டு வீடு வருவார். நாங்கள் முன்னரே வந்திருப்போம். என் சிலேற்றை அப்பாவிற்குக் காட்டுவேன். அதிலுள்ள 'சரி' களுக்காக 'நஷனல்' பொக்கற்றினுள் ஆழக்கைவிட்டெடுத்துக்காசு தருவார்.

பிறகு குசினிக்குள் நால்வரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிடுவோம். பின்னர் மகாஜனக் கல்லூரி இரு நேரப் பாடசாலை ஆதலால் அப்படிச் சாப்பிட முடியவில்லை. அதனாலென்ன, அப்படிச் சாப்பிட இரவுகளும் சனி, ஞாயிறுகளும் இருந்தன.

அப்பாவை நினைக்கிற போது, தூய நினைவுகள் கண்முன் காட்சி அளிக்கின்றன.

சோளகம் பேயாட்டம் போடுகிற காலங்களில் அம்மாள் கோயில் திருவிழா சாமம் பண்ணிரண்டு மணிக்கும் பிறகு எங்களை நித்திரையால் எழப்பி திருவிழா பார்க்க அழைத்தச் செல்வார். அது சின்ன மேளம் தொடங்கும் நேரமாக இருக்கும். பிற்காலங்களில் கோஸ்டி தொடங்கும் நேரமாக இருக்கும் என் வயதையொத்த நண்பர்கள் அப்போது தூங்கி வழிந்து கொண்டிரப்பர். "சாத்துவாய்" வழிந்து காய்ந்திருக்க, அசிங்கமாயிருப்பர். அல்லது புழுதி படிந்திருக்க சோம்பி வடிவர். நான் கச்சான் கொறித்து விழாப் பார்ப்பேன்.

ஒரு போதும் அப்பா என்னை, அக்காவை அடித்ததில்லை. ஏசியிருப்பார்


படிப்பகம்

www.padippakam.com

ஏசியபின், வேதனை வடிய, முதுகைத் தடவி ஆறுதல சொல்வர். தம் மடியிலிருத்திக் கதை கூறுவர். கதை கேட்டுத் தூங்கிப் போவோம்.

"சொத்தி வீட்டை போனோம். சொத்தி தந்த கையைப் பார். கடவுள் வீட்டை போனோம். கடவள் தந்த கையைப்பார்." என்று பாடி ஆடும் விளையாட்டை நான விளையாடுவதில்லை. அக்கா விளையாடினாரோ, என்னவோ? அப்பாவின் ஒரு கை விரல்கள் சொத்தி. என் அப்பாவைப் பழிக்க என்னால் எப்படி இயலும்? அப்படி அப்பாவின் கைவிரல்கள் சொத்தியாவதற்கு அப்பாபவின் மூத்த மருமகளே காரணம். மருமகளின் திருமணம் காரணம். கல்யாண ஊர்வலத்தில் ஏம்மூர் ஐயரின் வெடி கொளுத்தி வந்தார் அப்பா. திரி சிறிது. வெடி பெரிது. தன் நேரத்திற்கு முன் அது வெடித்தது. அப்பா கை சிதைந்தார். சில விரல்களை இழந்தர். ஆயினும் பொங்கலுக்கு எங்களுக்க வெடி வாங்கித்தர அப்பா மறுப்பதில்லை. அது நம்மூர் வெடி அல்ல, கொழும்பு வெடி.

தன் உறவின் மீதும், ஊரின் மீதும், மதத்தின் மீதும், மொழியின் மீதும், தன் தேசத்தின் மீதும் அப்பா தீருாத அபிமானம் கொண்டவர். அளவெட்டியும், அம்மாள் கோயிலும், தமிழும் தன்நாடும் அப்பாவின் பேரன்புக்குரியன.

தம் உறவினரை மிக நேசித்தார். "உங்களுக்குத் தெரியாது சின்னமாமாவின் நெஞ்சிலும் தோளிலும் வளர்ந்தவள் நான்" என்று மட்ராசிலிருந்து ஒரு மருகி எழுதுகிறார். "சின்ன மாமா கொழும்பிலிருந்து வரப்போகிறார் என்றால் ஒரு கிழமைக்கு முதலே சந்தோஷத்தால் குதிப்போம்" இன்னொர மருமகள் எழுதுகிறாள். "தகப்பன் அன்பை அறியாத எமக்கெல்லாம் அன்பைச் சொரிந்தவர் எம் மாமா" என்று மற்றொரு மருகி எழுதுகிறார். "ஊருக்கெல்லாம் ஓடியாடி உதவி செய்தவர் மாமா. அவருக்கு உதவி செய்ய நாங்கள் இல்லையே" என்று மைத்துனன் வருந்துகிறான். எல்லோரும் எழுத எழுத, அப்பாவின் மேல் மென்மேலும் என் அன்பு பெருகுகிறது. எம் வீட்டில் நடைபெற்ற செத்த வீட்டுக்கும், இனி நடக்கப் போகும் அந்தியோட்டிக்கும் ஒரு சொல் அறிவுரை கேட்க அப்பா இல்லை.

சமூக சேவையில் அப்பா ஆர்வம் கொண்டிருந்தார். அம்மாவுக்கு அது 'சம்பளம் இல்லாத உத்தியோகம்' அளவெட்டிப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் சபையில் நீண்ட காலம் இயக்குநராக இருந்தார். வ.பொன்னம்பலம் தலைவர். இலங்கையில் முதலாமிடம் பெற்ற சங்கமாக அளவெட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் திகழ்ந்தது. வி.பியுடன் அடிக்கடி சண்டை. "நான் ஊரில் இருக்கும் பொழுது எங்கெல்லாம் பொதுத் தொண்டுகள் உண்டோ? (எவ்விதச் சொந்த இலாபமும் கருதாமல்) அவை யாவற்றிலும் தலையிடுவேன். தவறைக் கண்டால் பட்டும் பாராமல், பணியும பாராமல் கண்டிப்பேன். திருத்துவேன். ஆனால் யாருடனும் பகைமை கொள்ள மாட்டேன். கொள்கையில் எதிர்ப்பு. ஆனால் தனிப்பட்ட முறையல் அல்ல" என்று குறித்திருக்கிறார். இப்படிக் குறித்தது போலவே அப்பா வாழந்தார் என்பதை நான் அறிவேன், நம்மூர் அறியும் நல்லோரறிவர்இ.

அப்பாவின் இறுதிக்காலமே துயர் தருவது.

அப்பாவின் அந்த வேகமான செந்தல் நடையும், அந்த நடையினூடு அவர் செய்து முடித்த வேலைகளும் ஒரு நிமிடம்



படிப்பகம்

www.padippakam.com

ஓயாத உழைப்பும்91இல், ஒரு விபத்தில், கால் உடைந்ததில் இல்லாமற் போனது. 2வது ஈழப்போர் தொடங்கிய காலத்தில் அப்பாவின் கால் உடைந்ததில் மிகத் திரப்தியான மருத்துவச் சிகிச்சை அவருக்கு வழங் 'கப்படவில்லை. யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியோ அப்போது மூடப்பட்டிருந்தது. பின் ஆஸ்பத்திரி திறந்த பிற்பாடு காலில் இரு தடவை சத்திரசிகிச்சை செய்யப்பட்டத. கால் சரியாகப் பொருந்தவில்லை. வாகன வசதி இல்லாக் காலம். புதிதாக முளைத்த சைக்கிள் ரிக்ஷோக்களில் அப்பாவின் பயணம். முறிந்த கால்கள் வலிக்க வலிக்க, வரும் வேதனையை மென்று விழுங்கி பயணம் செய்வார்.

92இல் கொழும்பிற்கு மிகுந்த சிரமத்தின் மத்தியில் அப்பாவை ஒருவாற கூட்டி வந்தாயிற்று. கொழும்பு ஆஸ்பத்திரியில் மூன்றாவது சத்திர சிகிச்சை அப்போதும் கால் பொருந்தவில்லை. வேதனைப்பட்டார் இடர்ப்பட்டார். வாழ்க்கையைத் தொலைநத்து விட்டேன் என்று வருந்திக் கசப்புடன் அனுபவித்தார். நொண்டி நொண்டி நடந்தார். கொழும்பின் வேமான வாழ்வில் அவர் பின் தங்கினார். ஒற்றைச் சிறகுடன் உலாவினார். அதுவே எம் நெஞ்சைப் பிழியும் வேதனையாக இருந்தது.

ஆனால், எப்போதும்அவர் சும்மா இருக்கவில்லை. எனக்கு, என் பாடசாலைக்க, நான் பங்காற்றிய பத்திரிகைக்கு எழுத்து வேலைகள் அதிகம் இருந்தன. அவற்றை அப்பாவும் பங்கு போட்டார். என் மனவைியில் உயர் கல்விக்குத் தேவையான குறிப்புகளைப் புத்தகங்களில் இருந்து திரட்டினார். தொகுத்தார். என மகன்களுக்கு பாடசாலையில் செய்யவேண்டிய கைவேலைகள் அப்பாவின் கைவண்ணத்தில் உருவாயிற்ற. சென்ற வருடம் நான் கால் முறிந்து படுக்கையில் கிடந்த போது அப்பா நொண்டி நொண்டி என்னைப் பராமரித்தார். எழுப்பி நடக்க வலிமை கொடுத்தார்.

பாபவும் கோபியம் ரதீப்பும் அப்பாவின் மார் மேலும் தோள் மேலம் வளர்ந்தார்கள். ஆர்த்தி பிறந்து சில நாட்களில் அக்கா கொழும்பிற்கு வந்ததால், ஆர்த்தியை அப்பா வளர்க்க இயலாது போயிற்ற. சின்னஞ்சிறிய கதைகள் உட்பட பென்னம் பெரிய கதைகள் யாவுமாக என் மகன்களுக்க நிறையக் கதைகள் தெரியும். அவை அப்பாவின் மிகப் பெரிய உபயம். அப்பாவின் அந்திம காலத்தில் தொலைக்காகட்சியில் மகாபாரதம், இராமாயணம், விஸ்வாமித்திரா எனும் தொடர்கள் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கின்றன. அடுத்த வாரம் என்ன நடக்கப் போகின்றது என்பதை என் மகன்கள் எனக்கு எடுத்தியம்புவர். அப்பா மதியம் அவர்களுக்குச் சாப்பாடு ஊட்டுகிற போது கூறியிருப்பார். முன்னர் பாபு, கோபிக்கு உணவு ஊட்டுகிறபோது நரியாக, மாடாக, நாயாக நடித்துத்தான் ஊட்டுவார். இப்போது இயலாததனால் கதை. அப்பா இறந்திருந்த போதும் ஒரு புராணத்தில் வரும் பாத்திரத்தைச் சுட்டி "பாட்டாவும் திரும்ப எழும்பி வருவார்" என்கிறான் என் மைந்தன்.

என் மக்களுக்கு பாடசாலை பன்னிரண்டு மணிக்கு விட்டு விடும். வீடு வந்து விடுவர். அப்பாவே பராமரிப்பார். உணவு ஊட்டுவார். கதை கூறுவார். கதை கேட்பார்கள். உண்பார்கள். பாட்டாவிற்கு தம் கதை கூறுவார்கள். பாட்டா படக்கை விரிப்பர். பையன்கள் படுக்கையில் புரள்வார்கள்.


படிப்பகம்

www.padippakam.com

இப்போ என் பையன்கள் பாடசாலை விட வீட்டை வரமாட்டேன் என்கிறார்கள். "வீட்டை போனால் பாட்டாவை நினைச்சால் அழுகை அழுகையா வருது" என்று கண் கலங்குகிறார்கள்.

யாவற்றிலும் கொடுமை இது தான். இறுதிக்காலத்தில் அப்பா எம்மூரில் இல்லாமற் போனார். எம்மூர் எம்மிடம் இல்லாமற் போனது "எங்கன்ரை கிணத்துத் தண்ணி குடிச்சே சிவிக்கலாம்" என்பார் அப்பா. தோட்டங்களும், வயல் வெளிகளும் சூழ்ந்த கிராமம். அடர்ந்த தோப்பாகப் பனைகள் நிறைந்த ஊர். வழுக்கி ஆறம், பினாக்கைக் குளம் உள்ள ஊர் அது. ஊரின் ஒரு எல்லையில் அம்மான் கோயில். அதுவே அப்பாவின் கோயில். வெள்ளி தோறும் பஜனைக்குச் சென்று, திருவிழா தோறும் விரதம் பிடித்து, பிரதட்டை பண்ணி, நல்ல நாளில் தேங்காய் உடைத்து, 'நெஞ்சம் உரக, விழியருவி முத்து உதிர மெய்ப்புளகம் உர, ஊரை குழற' கும்பிட்ட கோயில். அந்த ஊரில், அளவையூரில் அப்பா இல்லாது போனார்.

சிறுகச் சிறுகச் சேமித்த காசு. உடல் வருத்தி, உழைப்புக் கொடுத்து, ஓய்தலின்றி, ஒழிச்சல் அற்று, வியர்வை சிந்தி, வருந்தி உழைத்த காசு. அந்தக் காசில் வாங்கிய காணி வெட்டிய கிணறு. கட்டிய வீடு. வீட்டுக் காணியில் எல்லாப் பழமரங்களும் விளைந்தன. தோடை, மா, கொய்யா, மாதுளை, எலுமிச்சை, வாழை, அட, வாழையிலும் கூட எத்தனை வகைகள்? கப்பல், கதலி, இதரை, மொந்தன், செவ்வாழை, பூவாழை, யானை வாழை, பன்றி வாழை, பச்சை நாடான் வாழை என்று எல்லா மரங்களும் கண்ட காணி.அப்பா கிணற்றில் அள்ளி இறைத்த விளைச்சல். உயர்ந்த வீடு. வளமான காணி. அழகான சூழல். இந்த வீட்டில், இந்தக் காணியில், இந்தச் சூழலில் அப்பா இல்லாது போனார்.

எழில் சூழ்ந்த இலங்கை நாட்டில் தமிழ் மொழி பேசுவோர்க்க விதிக்கப்பட்ட விதியின் பிரகாரம், அப்பா தன் தாயகத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டார்.

அப்பாவிற்கு அதுவே மிக வேதனையாக இருந்தது. எந்த நாளினிப் போய்ச் சேர்வோம் என்று நினைத்தாரோ? வீடு, ஊர், கோயில், உறவினர்... என்று சுற்றிச் சுற்றி அதுவே நினைவாகியது. நினைவே யமனாகியது.

அப்பா சொன்னார் "இண்டைக்கு அம்மாள் கோயில் கொடியேற்றம்" பிறகொரு நாள் கூறினார் "இண்டைக்கு அம்மாள் கோயில் தேர்..." என்று தொடர்ந்தார். "கோயிலும் இருக்கோ... ஆமிக்காரன் புத்தர் சிலையை வைச்சிருப்பான்.. தேரை எரிச்சிருப்பான்..." அடுத்த நாள் கூறினார். "இண்டைக்குத் தீர்த்தம்" பூங்காவனம் என்று சொன்ன மறுநாள் நெஞ்சுக்குள் நோ என்றார்.

பிறகு, நவமி தினத்தன்று, காகம் கரைய முடியாத, சேவல் கூவ முடியாத, மிக்க வைகுறு விடியற் பொழுதில் அப்பா இறந்து போனார்.

நம்மூரில் என்றாலோ அப்பா இறந்திருக்க மாட்டார். சோளகம் எகிறி, எகிறி, புழுதியை எத்தி, எத்தி, பனைகளை ஆட்டி, ஆட்டி வீசியிருக்கும். மாம்பழம், பலாப்பழங்களின் மணத்தினால் ஊரே நிறைந்திருக்கும். அப்பா அம்மாள் கோயிலுக்குச் சென்றிருப்பார். நெஞ்சைக் குடைந்து, அதன் ஆத்மாவைப் பிடித்து இழுத்து உருக்கிற நாகசுரத்தின் நாதத்தில் அப்பா உருகி இருப்பர். "அம்மாள் என்னைக் கை விட்டாள்" என்று நிச்சயமாக அப்பா நம்பியிருப்பார்.

**நன்றி : நினைவு கொள்ள**



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

உனது கைகள் வல்லமை குறைந்தனவாக இருக்கல

உடல் மெலிந்து விளங்கலாம்

தனது சக்தி மிக சிறிதாகவும் இருக்கலாம்

ஆனால்.... அஞ்சாதே;

மகத்தான மலை போன்ற இலட்சியத்தையும்

சாதிக்க முடியுமென்று திடமாக நம்பு

அந்த நம்பிக்கை..

உனது சிறிய கைகளுக்கும், மெலிந்த

உன் உடலுக்கும், குறைந்த உன்

சக்திக்கும், எதிராக எழுகின்ற

தடைகள் எல்லாம் பொடிப் பொடியா

கி விடும்

